242

# ஜகன்மோகினி

"JAGANMOHINI" SINGAPERUMALKOIL.

ஆண்டு 22

திங்கள். 1.

தாரண மார்கழி

January 1945.

## இவ்விதழில்

★

சுத்தானந்த பாரதி

பி. ஸ்ரீ

டாக்டர். நீ. சே

சூடாமணி

வை. மு. ஸ்ரீ

அம்புஜம்மாள்

குகப்ரியை

வை. மு. கோ

மற்றும் பிறர்

242

FEB 1945

MADRAS

JL

N45.22.1.

183097




TAMIL MONTHLY
ESTD: 1923

ஆசிரியை
வை. மு. கோதைநாயகி அம்மாள்
உதவி ஆசிரியர்
வை. மு. ஸ்ரீநிவாஸன். எம். ஏ, பி. எல்.

# கலைப் பொக்கிஷம்

அகிலலோக ரக்ஷகனும் கீதாசாரியனுமாகிய ஸ்ரீபார்த்தசாரதியின் திருவருள் கடாக்ஷத்தினாலும் ஸ்ரீ பாடலாத்ரி நரஸிம்மனின் பரம கிருபையினாலும் உங்கள் ஆதரவினாலும் பெரியோரின் ஆசீர்வாதத்தினாலும் மோகினிக்கு 21-ஆண்டுகள் இனிது முடிந்து 22-வது ஆண்டு மங்களகரமாகப் பிறந்துவிட்டது. மோகினி தனது பொங்கல் புதுமலரைத் தாங்கி ஆனந்தமாகக் காட்சியளிக்கிறாள். இந்தப் புதிய வருஷத்தில் கடவுளின் அருளால் நம்மெல்லோருடைய வீட்டிலும் ஆனந்தமாகவும், மங்களகரமாகவும் பால் பொங்கவேண்டுமாய் இறைவனை வேண்டுகிறேன்.

இந்தியா தனது நாகரிகத்தின் அடிப்படையான வேததர்மத்தை மறந்து பரதர்ம மோகத்தில் வீழ்ந்து அழிந்து வருகிறது. வேத தர்மத்தைக் காப்பாற்ற வேண்டியது பத்திரிகைகளின் கடமையாகும். இது சம்பந்தமாக ஒரு தமிழ்த்தலைவர் நமக்கு எழுதியிருக்கிறார்: "மோகினி ஒன்றே சூதாட்டமில்லாமல் தார்மிக உணர்ச்சியுடன் நடக்கிறது... ......மோகினியை உரிய காலத்தில் வாரப்பத்திரிகையாக்கமுடியும்...... மேன்மேலும் கண்ணபிரான் அருளால், கீதாதர்மத்தின் பெருமையால் மோகினி அபிவிருத்தியடையும்." (20—12—44.) இவ்வாறு அறிஞர்களின் ஆசியை அதிகரித்தே பெற்றுவரும் மோகினி, இந்தப் புது வருடத்தில் இன்னும் சிறப்பான தொண்டு புரிய முன்வந்திருக்கிறாள்.

(1) தார்மிக ஏணியில் படிப்படியாக வேதகாலந் தொட்டு இந்தக் காந்தியுகம்வரை நமது தர்மம் எப்படி வளர்ந்து வந்துள்ளதென்பதைக் கலாநிதி பி. ஸ்ரீ, தனது ப்ரத்யேகச் சிறப்பு வாய்ந்த முறையில் வெளியிடுவார். இந்தத் தொடரில் "வேதழகு" முதல் வியாசம். (2) சுவாமி சுத்தானந்த பாரதியார் நான்கு வேதங்களையும் ஆழ்ந்து ஆராய்ந்து அதன் ஸாரங்களைப் பாடிவரும் பணியில் தற்சமயம் ஈடுபட்டிருக்கிறார். வேததர்மத்தைக் காப்பாற்ற மோகினியில் காலத்திற்கேற்ற பாடல்கள் வெளிவரும். (3) பழைய பாடல்களும் அழகான மெட்டுக்களும் மறைந்து வரும் இக்காலத்தில், பழைய ஆடல் பாடல்களைப் புதுப்பிக்கும் புதிய பாடல்கள் வரும். (4) படங்களில் அட்டைப் படத்திற்கு விசேஷஸ்தானம் உண்டல்லவா? அடுத்த இதழ் முதல் அட்டைச் சித்திரம் ஒவ்வொன்றும் சமூதாயத்திற்கு ஒரு புதிய ஆதர்சமாக விளங்கும்; கவியோகியின் புதுப் புது கவிதாமலர் படப்பொலிவுடன் வெளிவரும். ஸ்ரீ ராகவன் சித்திரக் கலைக்கு ஏராளமான விருந்து காத்திருக்கிறது. "சகோதரிகளுக்கு மட்டும்" "குழந்தைகளுக்குமட்டும்" "டாக்டரின் டயரியிலிருந்து," "குடும்பவைத்தியம்" முதலிய பகுதிகள், கதைகள், கட்டுரைகளுடன், இதர அம்சங்களும் மோகினியைச் சிறப்பிக்கின்றன.

கலைவாணியின் அருளால் உதிக்கும் அறிவுப்பொருளை இயன்ற அளவில் அன்பர்களுக்கு அளிப்பதே மோகினியின் பணி. இத்தகைய தமிழ்த் தொண்டில் உருவாகிய மோகினி தாரண பொங்கல் மலரைக் குறித்து சில விவரங்கள் கூறவேண்டியதவசியம். முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம்வரை, முழுதும், 200 பக்கங்களும், வாசகர்களுக்கு வேண்டிய பலவகைப்பட்ட கலை விருந்தே அளிக்கப்பட்டிருக்கிறது. மிகப் பிரஸித்தி பெற்ற எழுத்தாளர்கள் அநேக அரிய பெரிய விஷயங்களைக் குறித்து எழுதிச் சிறப்பித்துள்ள இம்மலரில் சுமார் 100 சித்திரங்கள் பூரணப் பொலிவுடன் திகழ்கின்றன. விளம்பரங்களைச் சேகரியாது, பணமேதான் பிரதானம் என்று கருதாது, அபாரமான செலவில் தயாரான இந்த அரிய

# ஜகன்மோகினி

தனிப்பிரதி அணா 4.
வருட சந்தா ரூ. 3.
ஜீவிய சந்தா ரூ. 50


ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி


Vol. 22. No. 1. தாரண மார்கழி January 1945.






FEB 1945


## கவிதை

உணர்ச்சி ததும்புவது கவிதை—உள்ளே
ஊற்றெடுத்துப் பொங்குவது கவிதை—அருள்
மணக்க மலருவது கவிதை—புது
வாழ்வை வழங்குவது கவிதை.

வெண்ணிலவுத் தென்றலிலேகூடி—உயர்
வெள்ளிமணி மாடத்தில் அமர்ந்தே
கண்ணனைய காதலர்கள் உண்ணும்—இன்பக்
கட்டிக் கனிரஸமே கவிதை!

சேயின் இளநகையைப்போலே—எழும்
செங்கதிரின் தங்க ஒளிபோலே
தாயின்முலைப் பால[illegible]போலே—பொங்கித்
தானாய் வருவதுவே கவிதை

வானின் அமுத மழைபோலே—நர
வாழ்வுப் பயிரைக் கலையாக்கி,
ஆனந்த மளிப்பது கவிதை—அதை
ஆக்கும் கவி இறைவனுமே!

சுத்தானந்த பாரதி


18307

கவிதை பூரணம் பெறவேண்டுமானால், வெறும் இலக்கியப்படிப்புமட்டும் போதாது. கம்பனையும் நைடதத்தையும் காதலப்பாடம் பண்ணினாலும் போதாது; பழங்காலத்தில் பரிசிலுக்காகப் பாடுவதுபோல், சும்மா ஆட்களைப் புகழ்வதும், அங்க வர்ணனைகளும் போதா; இக்காலம் கலையுணர்ச்சி ஆயிரம்மடங்கு அதிகம். இது ஐம்புலன்களையும் ஐம்பூதங்களிற் செலுத்தி மனிதன் பல அற்புதங்களைக் காணும் காலம். ஆதலால் இக்காலக் கவிக்கு உலகம் நன்றாகத் தெரியவேண்டும், சந்திரமுகம், தாமரைக்கண், அல்லிக்கரம் போன்ற உவமைகளும் புளித்த பழங் கஞ்சியே.

இக்காலக்கவிகள் உவமைகளை விஞ்ஞானக் கலைகளிலிருந்து எடுத்தாளவேண்டும். சாதாரணப்பேச்சாகவே காரியத்திற்குக் கப்பல்; அவன் ரயில்; அவள் இச்சை தண்டவாளம்; ஆகாசக் கப்பல்போலப் பறக்காதே; நிதானமாகச் செய்; உப்பும் அப்பும்போல் உயிர் இறைவனுடன் கலக்கிறது" என்று விஞ்ஞான உவமைகளைக் கையாளுகிறோம். கவிஞன், கதை எழுதுவோன், ஆகிய இருவர் மூளையும் கண்ணும் உள்ளமும் இயற்கைப் பொருள்களை ஆராயவேண்டும், பல கலைகளை ஊடுருவிப் பார்க்கவேண்டும். கவி வெறும் மொழிபெயர்ப்போனல்லன்; படம் பிடிப்போனல்லன்; மைகேல் ஆஞ்ஜலு கற்சிற்பியானால், தாந்தே கனவுச் சிற்பி. வில்லியம் பிளேக்கிடம் காவியம் ஓவியம் இரன்டும்பொருந்தியிருந்தன. அவன் தனது தியானக் காட்சிகளையே மனப்படமாக வரைந்து, பிறகு வர்ணப்படமாக எழுதி, அதன் பிறகு சொல் லோவியமாக்கினான். உண்மையான கவி ஓர் உலகம். அவன்உலகம் மனோதீதமானது; அந்த அதீத உலகினின்றுதான் அவனுடைய சிருஷ்டிக்கனவுகள் கருத்துருவாகிப் பிறகு சொல்லருவ்களாகச் சலசலத்தோடுகின்றன: அந்தச் சலசலப்பில் ஆத்மஞான ஓங்காரத்துடன் அகில ஜீவநாதமும் கேட்கிறது; அந்தநாதஅருவியில்வாழ்க்கைக்கலையின் ஜதிஸ்வரங்கள் நவரஸ நடனம் புரிகின்றன. மாக்வெலும், எடிஸனும், மார்கோனியும் மின்சார சக்திகளை ஆராய்ந்து மனித நாகரிகவளர்ச்சிக்குப் புதிய கருவிகளைக் கண்டுபிடிக்கிறார்கள். இவர்களுக்குள்ள சிந்தனைசக்தியைவிட ஷேக்ஸ்பியருக்கும், காளிதாஸனுக்கும் ஆயிரம் மடங்கு சக்தி அதிகம்; இம்மகாகவிகள் உள்முகப்பட்டு, உட்கனவிலேயே ஆழ்ந்து, உள்ளிருந்து இயற்கையை ஆராய்ந்து, ஒவ்வோர் எண்ணத்தையும் சொல்லையும் சாணை பிடித்துக் கலைச்சுவையேற்றிக் காவியரத்தினங்களைப் பட்டைபோட்டு அழகான தங்க அணிகளிற் பதித்துத் தருகிறார்கள். இப்படிப்பட்ட காவியச் சிற்பிகளே மஹாகவிகள் ஆவார். இவர்கள் உள்ளத்தில் கவியாயிருப்பவன் பரமாத்மனே.

வால்மீகி, வியாசர், சங்கரர், கம்பன், காளிதாஸன் மில்தன், தாந்தே, ஹோமர், விர்ஜில், துளஸிதாஸர்,.-இந்தப் பத்துப் புலவர்களும் வாக்கினால் அமரத்தன்மைபெற்ற மகா கவிகள் ஆவார்கள்.




"சேர்ந்து செல்லுங்கள். ஒரு முகமாய்ப் பேசுங்கள். எல்லாருடைய உள்ளங்களையும் ஒற்றுமையாய்த் தெரிந்துகொள்ளுங்கள். உங்கள் தீர்மானம் ஒன்றாக இருக்கட்டும். உங்கள் இதயம் ஒன்றாகட்டும். எல்லாரும் சுகமடையும் பொருட்டு உங்கள் உள்ளங்கள் ஒற்றுமைப் படவேண்டும்"— இப்படியெல்லாம் சொல்லுகிறாரே, இவர் யார்? நவீன அரசியல் வாதியா? சமூகச் சீர்திருத்த வாதியா? பொதுவுடைமைப் புரட்சிக்காரரா? இவர்களில் யாருமில்லை. சரித்திரமும் எட்டிப் பார்க்கமுடியாத அந்தப் பழங்காலத்திலே, ஞானத்தின் நவ அருணோதயம் இந்திய வானில் தோன்றிய அத்தகைய காலத்திலே, அகில லோகத்தையும் மூடிக் கிடந்த இருளைக் கடைந்து எழுந்த அமுத வாக்கு இது. இப்படி ஒற்றுமைப் பிரசாரம் செய்கிறவர் ஒரு வேத காலத்து மகரிஷி என்றால் உங்களுக்கு எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது! ஆம், ரிக்வேதம் பாடிய ஒரு முனிவரின் வாக்கு இது.

* * * *

உலகமெல்லாம் அறியாமையிலும் அநாகரிகத்திலும் ஆழ்ந்திருந்த காலத்திலே—மனிதன் இவ்வுலகின் பல பகுதிகளிலும் மிருகத்தோடு மிருகமாய்த் திரிந்துகொண்டிருந்த காலத்திலே—வேத ரிஷிகள் தமது கவித்வ சக்தியாலும் தீர்க்க தரிசனத்தாலும் சில மகத்தான உண்மைகளைக் கண்டு பிடித்தார்கள். நமது ஹிந்து தர்மத்தின் அடிப்படையான, ஸாரமான, மூலாதாரமான ஞானத்தை அவர்கள் கண்டுவிட்டார்களென்றே சொல்லலாம்.

இயற்கையைப் பார்த்தார்கள். அதிசயத்தோடும் பயபக்தியோடும் பார்த்தார்கள், இயற்கையின் மாட்சிகளையும், அழகுகளையும், சக்திகளையும், இயற்கையிலேயே தெய்வ உண்மை கண்டார்கள். அருணோதயத்தையும் சூரிய சந்திரர்களையும், காற்றையும் புயலையும், மழையையும், மின்னலையும், வானத்தையும், தேவதைகளாக வழிபட்டார்கள். அருணோதயத்தை ஓர் அழகிய கன்னித் தெய்வமாகக் கருதினார்கள்.

சூரியதேவனை வழிபட்டவர்கள் நாளடைவில் சூரியனுக்கும் அதிதேவதையாகிய தேவன் ஒருவன் உண்டென்று

கண்டுபிடித்துச் சூரியநாராயண மூர்த்தியாக வழிபட்டார்கள். பிரசண்ட மாருதத்தின் அதி தேவதை ருத்ரனைகப் பரிணமித்து விட்டது. மழைக்கடவுள் இந்திரனுகிவிட்டது. வானம்வருணனுயிற்று. மரணம் எமனுகி இறந்தவர்களின் தர்ம நீதிபதியாயிற்று! அக்னிபகவான்வாயிலாக மற்றத் தேவர்களையெல்லாம் ஆராதித்துவந்தார்கள். தேவர்களுக்கெல்லாம் தேவனுகிய ஒரு முழுமுதற் கடவுள் உண்டு என்பதையும் நாளடைவிலே கண்டு கொண்டார்கள் வேதமுனிவர்கள்.

* * * *

வேத காலத்திலே ஜாதிபேதம் கிடையாது என்பது வேதங்களை ஆராய்ந்த பிரபல அறிஞர்களின் அபிப்பிராயம். புருஷ ஸூக்தத்திலே பிராம்மணன் பிரம்மத்தின் முகம் என்றும், க்ஷத்திரியன் புஜமென்றும், வைச்யன் தொடை என்றும், மற்றவர்கள் பாதமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு சமுதாயத்தின் தலையாகவோ முகமாகவோ அறிஞர்களைக் கொள்வதும், போர் வீரர்களை வீரத்தோளாகக் கருதுவதும், யாத்திரை செய்து வியாபாரம் செய்யும் வைச்யர்களைத் தொடையாக நினைப்பதும், சமுதாயத்தை நிலை நிற்கச் செய்யும் தொழிலாளிகளைப் பாதமாகக் கற்பிப்பதும் ஓர் அழகான கவித்வ சக்தி வாய்ந்த கற்பனை தான்! குணத்தையும் செயலையும் வைத்து இத்தகைய கற்பனை தோன்றியிருக்கவேண்டும். நாளடைவில் பிறப்பும் பரம்பரையும் முக்கியமாய்க் கருதப்பட்டதால், பழைய வர்ணாச்ரம தர்மம் உருக்குச் சட்டம்போன்றஜாதிக் கட்டுப்பாடாக மாறிவிட்டதாம்.

இது எப்படி இருந்த போதிலும் மகத்தான சமய உண்மைகளைக் கண்டுபிடித்த வேத ரிஷிகள்—ஒரு மகத்தான நாகரிகத்திற்கு விதை ஊன்றிய தீர்க்கதரிசிகள்—ஜாதி முதலான பாகுபாடுகளுக்கெல்லாம் அதிதமாக வாழ்ந்த அதிவர்ணாச்ரமிகளே யாவர் என்பது திண்ணம். அக்காலத்தில் தற்கால விஞ்ஞான மனப்பான்மையும் ஆராய்ச்சி மனப்பான்மையும்இல்லாவிட்டாலும், வேத ரிஷிகளுக்கிடையே கவித்வ சக்தியும் மானஸ சாஸ்திர அறிவும் எப்படியோ விசேஷித்துக் காணப்பட்டன. இத்தகைய சக்திகளைக் கொண்டு தான் இவர்கள், இந்நாளிலும் உலகம் போற்றும் சமய உண்மைகளைக் கண்டு பிடித்திருக்க வேண்டும்.

* * * *

அரவிந்தயோகி என்று உலகப் பிரசித்திபெற்றவரும், இப்போது புதுச்சேரியில் யோகம் செய்து கொண்டு சிஷ்யர்களுக்கும் யோக உண்மைகளை அறிவுறுத்தி வருபவரும் ஆகிய ஸ்ரீஅரவிந்த கோஷ் வேதங்களைக் கேவலம் புலமைக் கண்ணே, ஆராய்ச்சிக் கண்ணே கொண்டு மாத்திரம் பாராமல், யோகக்கண்ணும் ஞானக் கண்ணும்கொண்டு பார்த்து ஆராய்ந்திருக்கிறுர். இவருடைய அபிப்ராயத்திலே தேவாஸுர

யுத்தமெல்லாம் சிலர் நினைப்பது போல் ஆரிய திராவிடச்சண்டை யல்ல. உதாரணமாக இந்திரன் விஞ்ஞானசக்தியைக் குறிப்பதாகவும், அவன் எதிரியாகிய விருத்திரன் என்ற அசுரன் அஞ்ஞானத்தைக் குறிப்பதாகவும் அரவிந்தர் குறிப்பிடுகிறார். உடல், பொருள், ஆவி, அறிவு அனைத்தையும் தேவர்களுக்கு அர்ப்பணம் செய்து, அஞ்ஞான சக்திகளாகிய அசுர சக்திகளை ஹதம் செய்வதே யாகத்தின் பொருளும் பயனும் என்கிறார். இத்தகைய உண்மைகளெல்லாம் மகரிஷிகளின் யோகானுபவத்திலே கண்டவையென்கிறார்.

அரவிந்தரின் கொள்கைகளைப் பின்பற்றி நமது தேசிய கவியாகிய சுப்ரமண்ய பாரதியார் வேத ரிஷிகளின் கவிகளில் சிலவற்றை மொழி பெயர்த்து வியாக்யானமும் செய்திருக்கிறார். கவிதைக்கிடையே மந்திரங்களும் திகழ்கின்றன என்றும், இந்த மந்திரங்களை வேதரிஷிகள் தங்கள் உள்ளத்தைத் தெளிவு செய்து அந்த உள்ளத்தின் ஆழத்திலிருந்து கொண்டு வந்தார்களென்றும், அரவிந்த ஞானத்தில் ஊறிப்போன பாரதியார் சொல்லுகிறார். வேத கவிகளில் மந்திரங்கள் இருப்பதால் தான் வெறும் சொற்களுக்கு இல்லாத மகிமையும் இந்த மந்திரங்களுக்கு உண்டென்றும் பாரதியார் வற்புறுத்துகிறார்.

* * * *

"வேத ரிஷிகளின் கவிதை" என்பது பாரதியாரின் வசனங்களின் ஒரு பகுதியாக வெளியிடப்பட்டிருக்கிறது. இதைக் கூர்ந்து வாசிப்பவர்கள் வேத ரிஷிகளின் ஞான சம்பத்தை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். வேத ஸாரத்தையே ஒருவாறு தெரிந்துகொள்ளலாம் என்றுகூடத் தோன்றுகிறது. இந்திரன், அக்கினி முதலான தேவர்களைக்குறித்த மந்திரங்களில் மானஸ சாஸ்திர உண்மைகளும் யோக ரகஸ்யங்களும் வெளிப்படையாகவும் புதைபொருளாகவும் காணப்படுகின்றன எனலாம்.

ஓர் உதாரணமாக ஸரஸ்வதியைப் பற்றிய வேதமந்திரத்தைப் பார்க்கலாம்:—

"தூய்மை செய்வாள் ஸரஸ்வதி; வளங்களிலே வளமுடையாள், கருப்பொருளாவாள், நமது கேள்வியை அறிவினாலே தாங்குக.

உண்மைகளைத் தூண்டுவாள், நல்ல மதிகளை ஒளிபெறக் காண்பாள், நமது வேள்வியை ஸரஸ்வதி தாங்குகின்றாள். (உண்மைப்) பெருங்கடலைக் காட்சியினாலே தெளிவுறச் செய்கின்றாள். அறிவுகள் அனைத்திலும் ஸரஸ்வதி அரசு செய்கின்றாள்."

எவ்வளவு பொருள் பொதிந்த மந்திரம் பாருங்கள். ஸரஸ்வதி என்பது ஆதிகாலத்திலே ஓர் ஆற்றின் பெயரென்றும், அந்த ஆற்றங்கரையில் வஸித்தவர்கள் முதல் முதல் ஞானசம்பத்தை அடைந்ததால் ஆற்றின் பெயர் அறிவுத்தெய்வத்தின் பெயராகி விட்டது என்றும் ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். இன்றும், "அவனா! காவேரித் தண்ணீர் குடித்தவன்!...தாமிரபர்ணித் தண்ணீர் பருகியவன்!— ஆகையால் புத்திசாலி" என்று

சொல்லுகிறோமல்லவா? அப்படியே வேதகாலத்திலும் ஸரஸ்வதியாற்றில் உடல்குளிர, உளங்குளிர நீராடியவர்களும் அந்தத் தண்ணீரைப் பருகித் தாகவிடாய் தீர்த்துக் கொண்டவர்களும், "இந்த ஸரஸ்வதியின் அருள்தான் நமக்கு இவ்வளவு அறிவை அளித்திருக்கிறது" என்று கருதினார்கள்.

ஆகவே "அறிவுகள் அனைத்திலும் ஸரஸ்வதி அரசு செய்கிறாள்" என்று பாடினார்கள். "நல்ல மதிகளை ஒளிபெறக்காண்பாள்" என்று உளங்குளிர மதிகுளிர வாழ்த்தினார்கள். "உண்மைகளைத் தூண்டுவாள்" என்றும், "உண்மைப் பெருங்கடலைக் காட்சியினாலே தெளிவுறச் செய்கிறாள்" என்று அகம் தெளிந்து முகம் மலர்ந்து மந்திரித்தார்கள். நீராடி நிர்மலராய், "தூய்மை செய்வாள் சரஸ்வதி; வளங்களிலே வளம் உடையாள்" என்று மந்திரம்பாடிப் பூரித்துப் போனார்கள். சுருங்கச்சொன்னால் ஸரஸ்வதியை ஞான ஆறாக, ஒளி வெள்ளமாகக் கண்டார்கள்.

இந்த மந்திரத்திற்கு விரிவுரை செய்யும் பாரதியார் ஸரஸ்வதியைப்பற்றிய சில விசேஷ உண்மைகளை விநோதமாகவும் ஹாஸ்யமாகவும் வெளியிட்டிருக்கிறார்.

எதுகை மோனைகளுக்காகச் சொல்ல வந்த பொருளை மாற்றிச் சொல்லும் பண்டிதன், ஸரஸ்வதி கடாக்ஷத்தை இழந்துவிடுவான். யமகம், திரிபு முதலிய சித்திரக்கட்டுகளை விரும்பி, சொல்லுக்குத்தக்கபடி பொருளைத் திரித்துக் கொண்டு போகும் கயிறு-பின்னிப் புலவன் வாணியின் திருமேனியை நோகும்படிச் செய்கிறான். அவசியமின்லாத அடை மொழிகள் கோப்போல் அந்தத்தெய்வத்தின் மீது புழுதியைச் சொரிகின்றான். உலகத்தாருக்குப் பொருள் விளங்காதபடி இலக்கியஞ்செய்வோன் அந்தச்சக்தியை கரித்துணியாலே மூடுகின்றான்; "வெள்ளைக்கலை" உடுத்துவதில்லை. ...இலக்கியத்துக்குத் தெளிவும் உண்மையுமே உயிரெனலாம்."

இத்தகைய ஆழ்ந்த ஞானப் பொருள்களைக் கொள்ளைக் கொள்ளையாக வேதத்தில் பார்க்கலாம். இவற்றின் ஸாரமாக "ஸத்தியத்தைப்பேசு, தர்மத்தைச் செய்" என்ற மகத்தான உபதேசத்தையும் வேதந்தான் உலகத்திற்கு முதல் முதல் வெளியிட்டது.—முழக்கிக் காட்டியது என்றே சொல்லவேண்டும். ஆம், வேத முரசு அப்படியே முழங்குகிறது என்று பாடுகிறார் பாரதியார்.

ஆசை மரகதமே!
  அன்னைதிரு முன்றிலிடை
ஓசை வளர்முரசம்
  ஓதுவாய்-பேசுகவோ
சத்தியமே, செய்க
  தருமமே என்(று)ஒலிசெய்
முத்திதரும் வேத
      முரசு.

[ஆசை மரகதமே—ஆசைக்குரிய பச்சைக்கிளியே. முன்றிலிடை—முன் வாசலிலே.]

பாரத மாதாவின் அழகிய முன் வாசலிலே ஒரு முரசு முழங்கிக் கொண்டிருக்கிறதாம். சாதாரணமாக அரசர்களின் தலைவாசலில் வீர முரசுகள், "எதிரியைக் கொல்லு! போர் வெறி கொள்ளு!" என்று முழங்குவது வழக்கம். வேதம் என்ற ஞான முரசோ, "ராஜதந்திரமாகப்பேசு; வெடி குண்டுகளை வீசு" என்று முழங்காமல் "சத்தியம் பேசு, தர்மம் செய்" என்று சத்தியத்தையும் அஹிம்ஸா தர்மத்தை

யுமே பிரசாரம் செய்கிறதாம். இந்தக் காலத்தில், அதுவும் இந்த காந்தியுகத்திலே "எல்லாருக்கும் தெரிந்ததுதானே" என்று தோன்றலாம். ஆனால் அந்த இருள் சூழ்ந்த ஆதிகாலத்திலே நவநாகரிக வெள்ளையர்களின் முன்னோர் வர்ணப் பூச்சும் கொச்சைப் பேச்சுமாயிருந்த அந்தப்பண்டைப் பழங்காலத்திலே--இத்தகைய உபதேசங்கள் எவ்வளவு புரட்சிகரமாக இருந்திருக்கவேண்டும்?

---

அன்னை ஊட்டுகின்றாள்! பால் மட்டுமா? வீரமும், கல்வியும், வேண்டும் அறிவையெல்லாம் ஊட்டுகின்றாள். நிலவைக்கண்ட குமுதம்போல் குவிந்த கைகள் அருமையாய்த் தாங்குவதைப் பாருங்கள். பஞ்சபூதங்களையும் ரக்ஷிப்பதுபோல் அணைத்துநிற்கின்றன விரல்கள்!



# ஸ்திரீகளும் சொத்துரிமையும்

வாசகர்களுக்கு,

சென்ற வருஷ இதழ்களில் ஹிந்துலாப்படி, விவாகமுறை, விவாக சம்பந்தமான சட்டங்கள் இவைகள் கூறப்பட்டன. சீர்திருத்தச் சட்டங்களுள் விசேஷ விவாகச் (Special Marriage Act) சட்டத்திற்கு மட்டும் Valid ஆகக்கூடிய 'இந்திய விவாக ரத்துச் சட்டம்' என்றது சொல்லப் படவில்லை. ஆயினும், இப்பொழுது அதை விவரிக்கப் போவதில்லை.

வருகிற ஜகன்மோகினி இதழ்களில் பெண்களும் சொத்துரிமையும் என்ற விஷயத்தை என் சிற்றறிவுக்கு எட்டியமட்டும், எழுதலாமென்று உத்தேசம். ஜகன்மோகினி ஆசிரியரும், என் கட்டுரைகளை வழுவாமல் மாதம்தோறும் பிரசுரித்துவருவதுமன்றி மேன்மேலும் எழுதும்படி எனக்கு அப்போதைக்கப்போது தாக்கீத்து கொடுத்துக்கொண்டிருப்பது எனக்கு இந்த உத்ஸாகத்தை அளிப்பதாகிறது.

"அம்மா! நாங்கள் வந்தோமே என்று ஒரு கதர் சீட்டியாவது எடுத்துக் கொள்ளக் கூடாதா? ஒரு சுதேசீ ஸோப்பாவது வாங்கிக் கொள்ளக் கூடாதா?" என்று எங்கள் சாமான்களை பரப்பிவைத்துக் கொண்டு அந்த வீட்டுக்கார அம்மாவைப் பார்த்துக் கேட்போம், நாங்கள் வீடு வீடாய் சென்னையில் சுதேசி பிரசாரம் செய்து வந்தபோது.

அந்த வீட்டு அம்மாவின் கண்ணோ எங்கள் சாமான்மீதேயிருக்கும். கையோ,சுதேசி ஸோப்பையும், துணிகளையும் மாறிமாறி தொட்டுப் பார்க்கும். ஆனால் என்ன செய்வார் பாவம்! கையில் காசு இருந்தால்தானே? "சாயுங்காலம் மறுபடியும் வர மாட்டீர்களா? வீட்டுப் புருஷரிடமன்றோ காசு இருக்கிறது!" என்பார். ரொம்ப பரிதாபமாக இருக்கும் கேட்பதற்கு. கரிகாய்க்காரி, வளையல்காரன், பூக்காரி இவர்களுக்குக் கொடுப்பதற்கும், சோப்பு, சீட்டிகள் வாங்குவதற்கும், இம்மாதிரியான சில்லரை விஷயங்களுக்கெல்லாம் சமயமறிந்து, புருஷனை அணுகிப் பெற வேண்டிய நிலைமையில் தம் சஹதர்மிணியை வைத்திருக்கும் கணவன்மார் எத்தனை பேர்! இவ்விதம் வைத்திருப்பது ஏழைக்குடும்பங்களில் மட்டும்தான் என்பதில்லை. நடுத்தரக்குடும்பங்களிலும், பணக்காரக் குடும்பங்களிலும்கூட, இதே நிலைமைதான் ஸ்திரீகளுக்கு. பணக்கார ஸ்திரீகளின் நிலைமையை விட தொழிலாள குடும்பத்து ஸ்திரீகளின் நிலைமை எவ்வளவோ மேன்மையானது. அந்தக்குடும்பங்களில் கஜானா பொது. ஆண், பெண் இருவர் சம்பாத்தியமும் ஒரு (அரிசிப்) பானையில்தான் சேமித்து வைக்கப்படும். அதிலிருந்து எடுத்துச்

செலவு செய்ய இருவருக்கும் உரிமையுண்டு. இருவரும் குடும்ப பாரத்தைச் சமமாக வகிப்பவர் அன்றோ? தம் கணவன்மார் வருமானத்தை அறிந்து செலவு செய்யும் முறையை பெண்களுக்கு (மனைவிகளுக்கு) கற்பிப்பது புருஷனின் கடமையே அன்றி அவளை நம்பாது, கையில் காசு கொடாமலிருப்பதன்று கணவன்மார் கடமை.

இந்த நிலைமையில் தம் மனைவியை, கிரஹிணியை வைத்திருப்பதும் அதைப்பிறர் அறிவதும் அந்த மனைவிக்கு மட்டுமன்றி, புருஷனுக்கும் மரியாதை குறைவான செய்கையாகும்.

"பிள்ளைப் பிராயத்தில், தகப்பனும், பிறகு கணவனும், பிறகு மகனும், ஒரு பெண்ணைக்காத்து ரக்ஷிக்க வேண்டுமே யன்றிப் பெண்களுக்கு சுதந்திரம் கூடாது" என்று மனுதர்மம் சொல்லுவதாகவும், ஆகையால் பெண்களுக்கு சொத்து பாத்யத்தை தர்ம சாஸ்திரம் விதிக்கவில்லை என்றும், நவ நாகரிகப் பேர்வழிகள் போடும் கூக்குரலேயாகும் இந்த சொத்துரிமை விஷயம் என்று பலர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

"பெண்களுக்குச் சொத்துரிமை கூடாது. அவர்கள் கையில்காசு கொடுத்து வைப்பது பிசகு; இளகிய மனமுடையவர்கள்; எளிதில் ஏமாந்து போவார்கள். ஆகையால் காசை அவர்கள் கையில் கொடாமல் நாமே அவர்களுக்கு வேண்டிய துணிமணிகளை வாங்கித் தருவது மேல்" என்று அபிப்பிராயப் படும் கணவன்மார்களே, மறுநாள் தம் கைப்பணத்தைக் கொண்டு குதிரைப் பந்தயத்திலும், சீட்டாட்டத்திலும் துலைத்துவிட்டு வருவதை நாம் நிதர்சனமாகப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். எத்தனை மைனர்கள் கூத்தி, குடியிலும், கெட்ட மார்க்கத்திலும், தம் பிதுரார்ஜித சொத்தை யெல்லாம் தொலைத்துவிட்டு மனைவியையும், குழந்தைகளையும் தெருவில் தவிக்கவிட்டு நிற்கிறார்கள்!

ஸ்திரீகள்தான் பணத்தை சுலபமாக தொலைத்து விடுவார்கள் என்று நினைப்பது மிகவும் பிசகான எண்ணம்.

நிற்க,—பழைய காலத்தில் பெண்களுக்கு சொத்து இருக்கத்தான் செய்தது. இராமாயணம், பாரதம் இவற்றில் வர்ணிக்கப்படும் அரசிளங் கன்னிகளின் கல்யாண காலத்தில் (சீதை, சாவித்திரி, தமயந்தி போன்றவர்) அவர்களின் தகப்பனார்கள் ஏராளமான நகைகளையும், சீர்சிறப்புகளையும், யானை குதிரைகளையும், பணியாட்களையும் தம் குமரிகளுக்குச் சீதனமாக கொடுத்ததாகப் படிக்கிறோம்.

மேலும், பாரதத்தில், யுதிஷ்டிரர், பீஷ்மரிடம் தர்மங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும் போது (அனுசாசன பர்வம்) பெண்களைக் குறித்துப் பின்வருமாறு கேட்கிறார். "ஒரு தந்தைக்குப் பெண்ணும் புத்திரனைப் போலாகத் தகுந்தவளா? அப்

படியானல் அவள் தன் முன் னேருடைய ஆஸ்தியை என்ன முறையில் அடைகிருள்?"... அதற்கு பீஷ்மர், "தான் எப்படியோ, அப்படியே தான் புத்திரன், பெண்ணும் பிள்ளைக்கு ஒப்பானவள்தான். ஆகையால் தானகவே பெண்ணிருக்கும் போது வேருெருவன் சொத்தை எப்படி எடுத்துக்கொள்ளலாம்?" என்று கூறுகிருர். மற்ருெரு இடத்தில், "பெண்ணுக்கு நாலில் ஒருபாகம் தர்ம சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. சகோதரன் இல்லாத பெண், முழுச் சொத்துக்கும் உரியவள் என்று சிலரும், பாதிசொத்துக்கு உரியவள் என்று சிலரும் நினைக்கின்றனர்" என்கிருர். பின்னும், "ஒருவன் மனைவிக்குத் தன் பொருளில், மூவாயிரத்திற்கு மேற்பட்ட தாய பாகத்தைக் கொடுக்கவேண்டும், அவள் தன் பர்த்தாவினல் கொடுக்கப்பட்ட அந்ததனத்தை ஸ்வதந்திரமாக அனுபவிக்கலாம். தந்தையினல் கொடுக்கப்பட்ட திரவியத்தையும் அவள் (பெண்) எடுத்துக்கொள்ளவேண்டும். அவளை புத்திரனுக்குச் சமம் என்றே தர்மசாஸ்திரம் விதிக்கிறது" என்கிருர் பீஷ்மர். இதிலிருந்து, ஸ்திரீகளுக்கு சொத்துரிமை கூடாது என்ற கொள்கை இடைக்காலத்தில் வந்த வழக்கமென்றும், பண்டைக் காலத்திலிருந்து 'ஸ்திரீகளுக்கு சொத்துரிமைஉண்டு' என்பதை தர்மசாஸ்திரம் ஒத்துகொண்டுள்ளது என்று தெரிகிறது அல்லவா?

முதலில், ஸ்திரீதனம் என்பதை எடுத்துக்கொள்வோம். 'ஸ்திரீதனம்' என்கிற இந்தபதம் முதலில் கௌதமரின் தர்ம சாஸ்திரத்தில் காணப்படுகிறது. தற்காலத்து இந்துலாப் பிரகாரம் ஒரு ஸ்திரீக்குச் சேர்ந்த சொத்துக்கள் யாவும்,—அதில் அவளுக்கு முழு உரிமை இருந்தாலும் சரி—எந்த வழியில் வந்த சொத்தானுலும் 'ஸ்திரீதனம்' எனப்படும்.

ஆனல், மிதாக்ஷரம் வியவஹார மயூகம் முதலிய நூல்கள் வெவ்வேறு வ்யாக்கியானம் செய்கின்றன இந்த பதத்திற்கு.

முற்காலத்தில், கல்யாண சமயத்தில் பெற்ருேரும், பந்துக்களும், கணவன் வீட்டாரும், பெண்ணுக்கென்றுசில பொருள்களையும் ரொக்கமாகச் சில தொகைகளையும் பரிசாக வழங்குவது வழக்கம். அவைகள் 'ஸ்த்ரீதனம்' என்று அழைக்கப்பட்டு வந்தன. மேலும் தாய் வீட்டார் பெண்ணுக்கு 'மஞ்சள் காணி' என்று சில காணி நிலங்களையும் எழுதிவைப்பதுண்டு. புக்ககம் போகும் பெண்ணுக்குத் தன் இஷ்டப்படி செலவுசெய்துகொள்ள உதவுவதற்கே இந்த நிலவருவாய் உபயோகமாயிருந்தது. தற்காலம் அதை பாக்கெட் மனி என்பர். அதிகமாக வெள்ளிப்பாத்திரங்கள் செய்யும் வழக்கமோ, வரதக்ஷிணை கொடுக்கும் வழக்கமோ முற்காலங்களில் இல்லை.

தற்காலத்திலோ, கல்யாண காலத்தில் தாய்—தந்தையர்

எரேஷ்டமாக தங்கம், வெள்ளி, பித்தளை பாத்திரங்கள் கொடுக்கின்றனர். மற்ற சீர் சிறப்புகளிலும், கல்யாணச் செலவிலும் தண்டச்செலவு செய்கின்றனர். கடன்வாங்கியாவது இவைகளைச் செய்யுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். மேலும், 'வரதக்ஷிணை' யாகப் பெரும் தொகையையும் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகையால் தற்காலப் பெண்களுக்கு ஸ்தாவர சொத்து ஏதும் கிடைப்பதில்லை. இவ்வளவும் செய்து சொத்தையும் கொடுப்பது எப்படி முடியும்? இந்த முறையினால் பெண்களுக்கு நிரந்தரமான ஸ்த்ரீதனச் சொத்து ஏதுமில்லாமலே போய்விடுகிறது.

நாட்டுப்பெண், ஏராளமான பண்டம் பாத்திரங்களுடன் வீட்டுக்கு வந்ததும் மாமியார், வீட்டில் தான் இதுவரை ஆண்டு வந்த தன்னுடைய பாத்திரம், பண்டம் எல்லாவற்றையும் தன் மகளுக்கு என்று ஒதுக்கி, பரணில் ஏற்றி பத்திரப்படுத்திவிடுகிறாள். பிறகு வீட்டில் ஆளப்படுவது நாட்டுப்பெண் கொண்டு வந்த புது பாத்திரங்களேயாகும். பெண்வீட்டார் கொடுக்கும், பெரும் தொகையாகிற வரதக்ஷிணையோ, பிள்ளை வீட்டார் வாங்கிச் செலவு செய்து விடுகின்றனர். பெண்ணுக்கோ மாப்பிள்ளைக்கோ அது சேருவதில்லை.

'என் பிள்ளையை இவ்வளவு தூரம் படிக்க வைத்திருக்கிறேனே, அந்தச் செலவிற்கு இது சரிகட்டிப் போச்சு!' என்று கணக்கு சொல்லுவார் சில பிள்ளை வீட்டார்.

"பெண்ணுக்கு தாலிச்சரடு, புடவைகள், மற்ற கல்யாணச் செலவு இவைகள் யாவும் இந்த வரதக்ஷிணையிலிருந்து தான் செய்யப்பட்டன" என்பார் மற்றும் சிலர்.

பிள்ளைக்குக் கிடைத்த வரதக்ஷிணையைக் கொண்டு அடுத்த வருஷம் தங்கள் பெண்ணுக்கு விவாகம் செய்யும் குடும்பங்களும் உண்டு. அன்றி, பெண் வீட்டாரிடமிருந்து வரதக்ஷிணையாகப் பெருந்தொகையை பெறுவது மட்டுமன்றி, 'பெண்ணுக்கு, தாலி கூறைகளும் நீங்களே செய்து கொள்ள வேண்டும்' என்று கட்டளையும் போடுவர். இந்த ரீதியில் கடைசியில் பெண்ணுக்கு ஸ்திரீதனமாக மிஞ்சுவது, சில ஓட்டை உடைசல் பாத்திரப் பண்டங்களும், தான் அணிந்து கொண்டிருக்கும் ஒன்றிரண்டு நகைகளுமே யாகும். பழைய காலத்து மஞ்ச காணியும் இல்லை, தற்காலத்து வரதக்ஷிணைத் தொகையுமில்லை.

இந்த நிலைமையில் பெண்களுக்கு 'ஸ்த்ரீதனச் சொத்து' என்று குறிப்பிடக்கூடிய சொத்து ஏதும் பெரும் அளவில் இருப்பது எங்ஙனம்? எனினும் ஸ்த்ரீதனச் சொத்து விஷயமாக சிலசட்ட விவரங்களை பெண்கள் அனைவரும் அறிந்து கொள்வது அவசியம். அடுத்தஇதழில் அதன் விவரம் வெளியாகும்.

டாக்டரின் டயரியிலிருந்து

# டாக்டரும் மனிதன்தானே

**6**

(டாக்டர் நீ. சே.)

'அப்படிச் சொல்லாதயிங்கோ நீங்க தெய்வந்தான். என் வயிற்றில் பால் வார்த்தீர்கள். நீங்கள் சீனிவாசப்பெருமாளின் அவதாரமேதான்.'' என்று காலில் விழுந்து சேவித்தாள். எனக் கென்ன செய்வதென்று தெரியவில்லை. நல்ல வேளை; சீக்கிரமாகவே எழுந்து, ஏதோ அவளால் கொடுக்கக் கூடிய பீஸைக் கொடுத்து விட்டுச் சென்றாள்.

அன்று காலை முழுவதும் நான் பட்ட கவலை எனக்குத்தான் தெரியும். முந்தின நாள் இரவு சுமார் பத்துமணி யிருக்கும். பகலெல்லாம் அலைந்து, தலை வலி, கால்வலி, வயற்றுவலி என்றெல்லாம் கேட்டு, எனக்கே தலைவலி வந்துவிட்டது. அப்போது தான் குழந்தைகளிடம் குலாவிக் கொண்டே சாப்பிட்டு விட்டு உட்கார்ந்தேன்.

"டாக்டர், டாக்டர்'' என்று கூச்சல் கேட்டது. "யாரது'' என்று சொல்லிக் கொண்டே கதவைத்திறந்தேன்.

"டாக்டர், கொஞ்சம் தயவு செய்து, பேன் பேட்டைக்கு வர வேண்டும்.'' என்றார் வந்தவர்.

'பேன்பேட்டைக்கா!' இப்போவா! வரமுடியாதய்யா, வரமுடியாது. தயவு செய்து மன்னிக்க வேண்டும். ரொம்ப நேரமாய் விட்டது; தூங்க வேண்டும், மேலும், என் வண்டிக்கு டையர் வெகு மோசம், பெட்ரோலுக்கு ரேஷன் கூப்பனு மில்லை;'' என்று பதில் கூறினேன்.

தேசிகாச்சாரியை எனக்கு வெகு நாளாய்த் தெரியும். அவர் என்னிடம் ரொம்ப விசுவாஸம் கொண்டவர். அவருக்கும், அவர் மனைவிக்கும் நான் வைத்தியம் செய்து உடம்பை குணப்படுத்தினதினால் அவ்விருவர்களும் எனக்கு எந்த வியாதியையும் குணமாக்கும் சக்தியுண்டென்று நம்பிக்கை கொண்டவர்கள். பேன்பேட்டைக் கேசையும் நான் பார்த்தால் குணமாகுமென்ற திட்டம் அவருக்கு இருந்தது. ஆகவே கார் கஷ்டத்தைச் சொன்னதுமே, அவர் உடனேயே ஆளனுப்பி ஒரு டாக்ஸியைக் கொண்டுவந்து என்னை அழைத்துச் சென்றார்.

"அம்மா, டாக்டர் வந்து விட்டார்'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே ஓடினாள் ஒரு குழந்தை, வாசலில் வண்டி நின்றதும். குழந்தை இப்படிச் சொல்லிக் கொண்டே உள்ளே ஓடினது எனக்குக் கொஞ்சம் தைரியம் கொடுத்தது. நோயாளியைப் பற்றி எனக்குச் சொல்லப் பட்ட விஷய மெல்லாம் என் மனத்தை ஒருவாறு கலக்கிற்று. நாம் போகும் முன்னமே நோயாளி உயிரிழந்திருப்பானோ என்றஸந்தேகத்தை எழுப்பியது. கொடிய சிக்காயிருக்குமென்று நினைத்து உள்ளே சென்றேன்.

வீடு சிறிய வீடாயிருந்தாலும், அவர்களால் முடிந்த மட்டும் சீக்காளிக்கு வேண்டிய ஸௌகரியங்களைச் செய்திருந்தார்கள். வீட்டிலிருக்கும் தலையணைகளை எல்லாம் சிக்காளிக்குக் கைத்தாங்கலாக வைத்திருந்தார்கள். பொறுக்க முடியாத வேதனையினால் வருந்துவதுபோலிருந்தது அவன் முகம். வயது சுமார் பன்னிரண்டிருக்கும். போஷிப்புக் குறைவுமிருப்பதாய்த் தோன்றவில்லை. அவன் உடல், இடதுகை விரல், ஆடிக்கொண்டிருந்தன. தலையை ஒருபக்கம்சாய்த்துவைத்திருந்தான். இந்தச் சேஷ்டையெல்லாம் நான் இதுவரை பார்க்காத காட்சியாயிருந்தது.

உள்ளே கட்டிலிலிருந்தான் அந்தப் பையன். அவனைச் சுற்றி, தாயார், தகப்பனார், தாத்தா, பாட்டி, அயல் வீட்டுக்காரர்,வேறுகுழந்தைகள்எல்லோரும் இருந்தார்கள். அந்த அறை மிகச்சிறியது; மூன்று பெயருக்குமேல் இருக்க முடியாது. கூட்டம் அதிகமானதற்குக் காரணம்நான்தான்;என்னைப் பார்க்க வேண்டும். நான் நோயைப்பற்றி என்ன சொல்லப் போகிறேன். வேறு சில டாக்டர்கள் பார்த்து 'நோய் கொடிய நோய், ஜன்னி ஸம்பந்தமாயிருக்கு மென்றும் பெரிய ஆசுபத்திரிக்கு உடனே கொண்டு செல்ல வேண்டு மென்றும் சொல்கிறார்களே. இவர் என்ன சொல்லப்போகிறார்?' இப்படி யெல்லாம் எண்ணங்கள் அவர்கள் மனத்தில் உதித்து, கூட்டம் கூடினார்கள். கூட்டத்தைப் பார்க்க, பையனுக்கு நோவு அதிகமானது போலிருந்தது. அங்குக்கூடியிருந்தவர்களை வெளியே போகும்படி வேண்டிக்கொண்டேன், தாயாரை மட்டும் அருகிலிருக்கச் சொல்லி.

பரிசோதனைக் கருவிகளெல்லாவற்றையும் எடுத்து சோதனை செய்யத் தொடங்கினேன். நோயின் சேஷ்டைகள் நானறிந்த ஸாதாரண வகுப்பொன்றிலும் சேர்க்கமுடியவில்லை. இதற்கு முன் பையனைப்பார்த்த டாக்டர்கள் ஏன் பயந்தார்களென்று தெரிந்தது. அநேகம் கேள்விகளைக் கேட்டுப் பையனிடமிருந்தும், அவன் தகப்பனாரிடமிருந்தும் நோய் வருவதற்குக் காரணமான சில விஷயங்களையறிந்தேன். இப்படி சோதனை செய்யும்போது பையன் நோவு உடம்பில் பல விடங்களில் பரவியது. எனக்குச்சிலசந்தேகங்கள் தோன்றின. இவற்றைத் தெளிவாக்க, பையனை பேன்பேட்டை வீட்டை விட்டு வெளியே கொண்டுபோக வேண்டுமென்ற தீர்மானம் செய்தேன். தாய் தந்தையர்களும் ஒப்புக் கொண்டார்கள். பையனை வண்டியில் ஏற்ற, அவனைத் தூக்கிக்கொள்ள முயன்றார்கள் அங்கிருந்தவர்கள். வேண்டாமென்று சொல்லித் தடுத்து, "பையனுக்கு நடக்க முடியும், தானே வருவான்" என்று சொன்னேன். அவனை உற்சாகப் படுத்தி நடக்கச் செய்தேன். நடந்து வந்தான். பட்டணத்தில் அவன் தாத்தா வீட்

டுக்கு வண்டியை விடச் சொன்னேன்.

பையனை நடக்கச்செய்கிருரே இந்த டாக்டர், அவனுக்கு ஏதாவது நேர்ந்தால் என்ன செய்வதென்று, அங்கிருந்தவர்கள் கவலைப்பட்டார்கள். இருந்த போதிலும் என் வார்த்தையைத் தடுக்க ஒருவருக்கும் தைரியமில்லை. வழியில் பையனை உற்சாகப்படுத்தி அவனிடம் பேச்சுக் கொடுத்துக்கொண்டேவந்தேன்.

வெகு புத்தி சாலியாக என் கேள்விகளுக்குப் பதில் சொன்ஞன். வலியை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் மறப்பதைக் கவனித்தேன். தாத்தா வீட்டில் பையனை இறக்கி அவனுக்கொரு சாதாரண மருந்தையும் கொடுத்தேன். "இரவில் வலி குறைந்து, தூங்கிவிடுவான்" என்று வீட்டிலுள்ளவர்களுக்குத் தைரியம் சொல்லி, வீட்டுக்கு வந்து, நானும் நன்ருய்த் தூங்கினேன்.

மறுநாள் காலையில் பேன் பேட்டையிலிருந்து, பையனுடைய தாய் தந்தையர் மனப் பதட்டத்துடன் என்னைப் பார்க்க வந்தார்கள். அவர்களைக் கண்டதும் 'பையனுக்கு ஏதாவது சம்பவித்ததோ, நோயைப் பற்றி ஏதோ தவறுதலான எண்ணத்திஞல் கவனிக்காமலிருந்து விட்டேனே' என்றெல்லாம்நினைத்தேன். மனதில் இருந்தபயத்தை வெளியில் காண்பிக்காமல், "பையனுக் கென்ன?" என்று வாய்திறந்து, கேட்க ஆரம்பித்தேன். அதற்கு முன்பாகவே அவர்களிருவரும்ஆத்திரத்துடன் "பையனெப்படியிருக்கிருன்" என்று ஆவலுடன் கேட்டார்கள். "நீங்கள் சொன்னபடியே நாங்கள் இருவரும் பையனைப் பார்க்காமல் பேன் பேட்டையிலிருந்து விட்டோம். இரவெல்லாம் தூக்கமில்லை. அவன் எங்கள் அருமை மகன். அவனை என் பாட்டி தரையில் விடாமலே தூக்கிச் சுமந்து வளர்த்தாள். எதற்காவது அழுது விட்டால் அவள் சொல்லமுடியாத துயரமடைவாள். அவன் இரவில் சரியாய்த் தூங்கினஞ! இப்போதெப்படியிருக்கிருன்? நாங்கள் போய்ப் பார்க்கலாமா?" என்று கேட்டார் பையனுடைய தகப்பஞர்.

அப்போதுதான் என் மனம் ஆறுதலடைந்தது. இதற்குள் "நன்ருய்த் தூங்கிஞன் பையன், சும்மாத்தான் இருக்கிருன்" என்று சொல்லிக்கொண்டு தாத்தாவும் பாட்டியும் வந்தார்கள். எனக்குண்டான ஸந்தோஷத்திற்களவில்லை. "நான் சொன்னேனே ஸௌக்கியமாய் விடுவான்" என்று சொல்லவாயெடுத்தேன். ஆஞல் நிறுத்திக் கொண்டேன். எப்படியாகுமோ என்று கொஞ்சம் ஸந்தேகம்தான்.

"அப்பா, சீனுவுக்குப் பேச்சில்லை, கைகால் தணுத்துப்போச்சாம்" என்று சொல்லிக்கொண்டு ஒரு சிறு பெண் ஓடிவந்து "டாக்டரை உடனேயே வரச் சொல்லவேண்டும்" என்ருள். எனக்கு திகிலிட்டது. ஒருவேளை அனுவசியமாய் பயப்படுகிருள்

என்று ஒருதரம் நினைத்தேன். அடுத்த நிமிஷம் என் எண்ணம் மாறிவிட்டது. "ஒருக்கால், ஏதாவது அபாயம் நேர்ந்துவிட்டதோ" என்று ஸந்தேகித்தேன். வந்தவர்களை எல்லாம் சீக்கிரமாய் வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டு, உடனேயே நானும் புறப்பட்டேன்.

பையனை உற்றுப் பார்த்தேன். நாடியைக் கவனித்தேன். நாடியில் தோஷம் ஒன்றுமிருப்பதாகத் தெரியவில்லை. கால் கொஞ்சம் தணுத்தாற்போல்தானிருந்தது. பையனும் பேசவில்லை. கண் திறந்திருந்தது. ஆனால் நான் வந்திருப்பதை அறிந்ததாய்த் தெரியவில்லை. கைநடுக்கம் மாறி விட்டது. என் மனம் திரும்பவும் ஸமாதானமடைந்தது. சிரித்துக்கொண்டு நான் வெளியில் வந்தேன். தாய்தந்தையர்களுக்கும் "பயப்படவேண்டாம்" என்று சொல்லி வீடு சென்றேன்.

பையனுடைய சேஷ்டைகளைக்கண்டு பயப்படாமலிருந்தது நான்மட்டுமே. பையனுடைய மனஅமைப்பு மாறியது. அன்று சாயங்காலம் "டாக்டர்! எனக்கு உடம்பு நன்றாய்விட்டது; என் நோவெல்லாம் மாறிவிட்டன. உங்களை நமஸ்காரம் செய்கிறேன்" என்று என்னிடம் வந்து சொன்னான் அந்தப் பையன்.

நான் ஸாதாரண மனிதன்தான். இப்பையனுடைய தாய், விசுவஸத்தினாலும், பையனிடமிருக்கும் ஆதரவினாலும், நோயின் போக்கை முழுவதும் அறியாததினாலும், என்னை பெருமாளுடைய அவதாரமெனச் சொன்னாள். அதைக் கேட்க எனக்குக் கொஞ்சம் ஸந்தோஷம்தான். ஏனென்றால் டாக்டராயிருந்தாலென்ன, நானும் மனிதன் தானே.

---



★ மார்கழி உதயம் ★

# ஸ்ரீரங்கப்பட்டணம்

பார்க்கத் தகுந்த இடங்களுள் ஸ்ரீரங்கப்பட்டணமும் ஒன்று. சரித்திரக்கண் கொண்டு பார்ப்பவர்களுக்கும், பக்திக்கண் கொண்டு பார்ப்பவர்களுக்கும், இயற்கை அற்புதங்களைச் சுவைக்கும் கவிதைக்கண் கொண்டு பார்ப்பவர்களுக்கும் ஏற்ற இடம் அது. ஆம்பல் பூத்த ஸஹ்யபருவத மடுவிலே அவதரித்த இரண்டாற்று நடுவிலே, என்ற அருணசலக் கவியின் வாக்கை நினைவுறுத்தும் அழகிய காவிரி. இருவிரிவாகப் பிரிந்து பச்சிமவாகினி என்னும் புதுப் பெயரோடும் 'ஹோ'' வென்ற பேரிரைச்சலோடும் இந்த அழகிய சின்னஞ் சிறு தீவை தழுவிச் செல்லுகிறது. நதியின் பேரொலி இனிய கீதநாதம் போல் காற்றிலே மிதந்துவந்து மனதைக் குளிரச் செய்யும்.

ரயில்வே ஸ்டேஷன் சின்னதுதான். இருந்தாலும் அழகிய தூண்களைப் பார்க்கும்பொழுது மைசூர் அரசாங்கம் ஓரளவு கவனிக்கிறது என்று தோன்றும். கோடைக்கால வாசத்துக்கு மிகவும் ஏற்றது என்று நமக்குத் தோன்றும், ஆனால் உள்ளூர்வாசிகள் மலேரியா மிகுதியும் உண்டென்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் இந்த இயற்கையழகு மிகுந்த ஒரு தீவை ஹைதர் அலி தேர்ந்தெடுத்தது மிகவும் ஆச்சர்யப் படத்தக்கது. ஸ்டேஷனை ஒட்டி இரண்டொரு தெருக்கள், சிற்சில வீடுகள்; அவ்வளவுதான் ஊர். ஆனால் பாழ்பட்ட இடங்களைப் பார்க்கும்பொழுது ஒருகாலத்தில் எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்திருக்கக்கூடும் என்ற கற்பனை எழாமற் போகாது.

ஊரைச்சுற்றிப் பார்க்கவருபவர்களைத் தவிர விசேஷமான ஜனசஞ்சாரமில்லை. பேராசையே இல்லாத வண்டிக்காரர்கள் அவ்வூரின் முக்யமான அம்சம். ஊர்முழுவதும் சுற்றிக்காட்ட மூன்று ரூபாய்தான் வாடகை. அதுவும் நாள்முழுவதும் வேண்டுமானாலும் சுற்றலாம்.

## கோயில்

திருவனந்தபுரத்தை நினைவு மூட்டும் அகன்று நீண்ட கோபுரம். நாற்புறமும் அழகிய புல்வெளிகள். பச்சைப் பசேலென்று அலைவீசும் வயல்கள். ஊரை ஒட்டி அழகிய சிறு கோயில், அதிலே ஸ்ரீரங்கநாதர் உலக மகா யுத்தத்தைக்கூடப் பொருட்படுத்தாதவராய் ஆனந்தமாய்ப் பள்ளிகொண்டிருக்கும் அற்புதக் காட்சி.

அந்த விக்ரகத்தின் முகத்திலேதான் என்ன தேஜஸ்! இதழ்களிலே புன்முறுவல். சாதாரணமாய் மற்ற கோயில்களிலே, எண்ணெய்க் காப்பிட்டு பளபளவென்று தொட்டால் ஒட்டிக்கொள்ளும் பிசுக்குடனும், கண்மலரணிந்தும் காட்சியளிக்கும் அரங்கன், இங்கே அப்பொழுதே புதுப்புனலில் நீராடி எழுந்துவந்தது போன்ற கோலத்துடன் காட்சியளிக்கிறார். கண்மலர்களுக்குப் பதிலாக அழகிய அந்தக் கருவிழிகளைச் சுற்றிலும் வெண்மையான விழிகள் சற்றே தெரிவதுபோல் திருமண் காப்பைச் சாத்தியிருக்கிறார்கள். ஆகவே, அரைத்தூக்கமும் புன்சிரிப்புமாயிருப்பதுபோன்றகண்கள், நம் மைக்கருணையுடன் பார்ப்பதுபோல் தோன்றும். பல்லாண்டுகளுக்கு முன் செய்த அழகிய மணவாள

னது விக்ரகம், இப்பொழுதே செய்துவைத்ததுபோல் தோன்றும் புதுமை எம்பெருமான் புதுமைக்கும் புதுமையானவன், பழைமைக்கும் பழைமையானவன் என்று சொல்வதுபோல் தோன்றி நம்மைத் திகைக்கவைக்கும். சந்நிதியை அடையுமுன்னே, "காவிரிப் பெருநதியிலே ஒரு கருணை மாமுகில் துயிலுமே!" என்று உதயராகம் பாடத்தொடங்கினள் கமலா. ஆழ்வார்களும், ஜைனமாமுனிவராகிய இளங்கோஅடிகளும் தொழுத அருமையான காட்சி என் மனக் கண்களின் முன்பு தோன்றலாயிற்று. ஆனால் அந்த்யரங்கமாகிய ஸ்ரீரங்கத்தில் அர்ச்சகர்களின் அதிகாரத்துள் அடங்கி ஒடுங்கி அரவணைமேல் பதுங்கிக்கிடக்கும் அழகனை, இந்த ஆதிரங்கத்தில் அமைதியே உருவாய், யோகநித்திரை செய்யும் நிலையில் கண்டதும் எங்கள் உள்ளம் எல்லையற்ற பேரானந்தத்தில் ஆழ்ந்ததில் ஆச்சர்யமென்ன? பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அந்த ஆனந்தக் காட்சியில் மெய்மறந்து நின்றுவிட்டோம். தலைகள் தாழ கரங்கள் தாமாகவே குவிந்தன.

## கோட்டை

ஊரின் நடுவிலே கம்பீரமான கோட்டை ஹைதரின் வல்லமையைப் பாடிக்கொண்டிருப்பதுபோல் நிமிர்ந்து நின்றது. மிகவும் விசாலமான அந்தக் கோட்டைச் சுவர்களை ஒட்டி, அகழியும் உண்டு. ஏற்கனவே காவிரியே பெரிய அகழியாகவும் அரணாகவுமிருந்தும் இன்னொரு அகழியையும், அதைக் கடக்கப் பெரிய பாலங்களையும் பார்க்கப் பார்க்க நமது சிந்தை காலவெள்ளத்தை எதிர்த்துப் பலவருஷங்கள் பின்னேக்கிச் செல்லும். ஸ்டேஷனிலிருந்து கும்பஸ் என்னும் இடம்போக கோட்டையின் ஒரு வாயிலில் புகுந்து மற்றொரு வாயில் வழியாகவே போகவேண்டும். நிர்மானுஷ்யமான அந்தக் கோட்டையின் வானையளாவும் மதில்களுக்கிடையே செல்லும்பொழுது நாம் எங்கே இருக்கிறோம் என்பதே மறந்துவிடும்.

கோட்டையைத் தாண்டியதும் இருபுறமும் அடர்ந்த சோலைகள். பல்வேறுவிதமான பழமரங்கள். புலாமரங்கள் மிகவும் அதிகம். சுற்றிலும் ஏறியும் இறங்கியும் செல்லும் அழகிய சாலைகள். பக்ஷிகளின் மிருதுவான கலகல சப்தம், சிலுசிலுவென்று வீசும் காற்று எங்கிருந்தோ விதவிதமான வாசனைகளைச் சுமந்துவந்து சாலை முழுவதும் இறைக்கும். இவைகள் எல்லாம் சேர்ந்து எங்களை எங்கேயோ ஒரு அற்புத உலகத்துக்கே அழைத்துச் செல்வதுபோல் தோன்றியது.

எதிரே இரண்டு பாதைகள் பிரியுமிடம், மிகவும் பெரிய எழுத்துக்களைத்தாங்கிய ஒரு பலகை. கும்பஸ் போகும் பாதை என்று ஆங்கிலத்திலே எழுதியிருந்ததைப் பார்த்த பிறகே "ஓகோ! இது பூவுலகம் தான். அதிலும் காவிரிக் கரையிலுள்ள ஸ்ரீரங்கப்பட்டணம்தான் என்ற நிச்சயத்திற்கு வந்தோம். இயற்கையரசி தன் முழு சௌந்தரியத்தையும் வாரிக்கொணர்ந்து அங்கே கொட்டி வைத்திருக்கிறாளோ? என்று தோன்றும்படி இருந்தது அந்தப் பிரதேசம்.

தொடரும்

அமுதமொழி

கிளேஸ் பதிப்பு 2-8

பாதாமி (மஞ்சள்) 2-0

அன்ப்ளீச்ட் 2-0



அன்புள்ள குழந்தைகளே !

உங்களுக்கென்று மோகினியில் தனிப் பகுதி இல்லையென்று நீங்கள் குறைபட்டுக்கொண்டிருந்ததை நிவர்த்தி செய்ய ரேடியோ மாமா சூடாமணி முன்வந்திருக்கிறார். இந்த இதழில் கரடிராயர் கதையும், ஒரு குழந்தையின் பாட்டும் வெளியாகியிருக்கின்றன.

மோகினி பொங்கல் மலர் வேலையினால் இவைகளுக்குப் படம்போட முடியவில்லை. அடுத்த இதழிலிருந்து உங்கள் பகுதியில் கலர் படங்கள் வெளிவந்து உங்களை மகிழ்விக்கும்.

—மோகினி மாமா.

## கரடிராயர் பண்ணின உத்யோகம்

கரடி ராயர் காட்டு இலாகாவுக்குப் புது அதிகாரியாக வந்தார். காட்டில் இருக்கும் மிருகங்களும் பறவைகளும் மரம் செடி கொடிகளைப் பாழ் அடித்து வருவதாகக் கேள்விப்பட்டுக் காட்டிலே கூடாரம் போட்டு எல்லாவற்றையும் சரிப்படுத்தத் தொடங்கினார். அவர் பண்ணின அட்டகாஸம் காட்டு வாசிகளுக்குப் பிடிக்கவே இல்லை. எல்லா மிருகங்களும் பறவைகளும் கூட்டம் போட்டுக் காட்டிலிருந்து அவரை ஓட்டிவிட யோசனை பண்ணின.

கரடிராயர் காட்டுக்கு வந்த முதல் நாள், காடு அடர்ந்த ஒரு இடத்திலே, ஒரு ஆலமரத்தின்கீழ் கரடிராயர் கூடாரம் இருந்தது. கரடிராயர் சாய்வு நாற்காலியிலே சாய்ந்தபடியே பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். அவருடைய சமையல் காரன் தாட்டய்யக் தூரந்த திம்மராயன் சமையல் பண்ணிக் கொண்

டிருந்தான். கரடிராயருடைய குமஸ்தா கழுதைச் சாமியும் காட்டுச் சேவகன் காளையப்பண்ணுவும் ராயர் முன்னே வந்து கை கட்டி நின்றார்கள். கரடிராயர் பத்திரிகையைப் பக்கத்து மேஜைமேல் வைத்துவிட்டு, "என்ன? என்ன சொன்னார்கள் அந்தப் போக்கிரிகள்?" என்று கத்தினார் கோபத்தோடு.

"ஸார், நாளைக்கு எல்லாரும் வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள்!" என்று நடுங்கிக்கொண்டே சொன்னார் கழுதைச் சாமி. அந்த நேரத்தில் முசல் தீக்ஷிதர் அங்கே வந்தார். நீண்ட கும்பிடு ஒன்று போட்டார்.

"யாரடா நீ?" என்று கத்தினார் கரடி ராயர்.

"ஜோஸ்யன்."

"யார் உன்னை இங்கே வரச் சொன்னது?" என்றார் கரடி ராயர் வெகு கோபத்தோடு.

"யாரும் இல்லை. நானாகத்தான் வந்தேன் ஒரு சமாசாரம் சொல்லிப் போகலாம் என்னு. இந்த ஆல மரத்தின் அடியிலே கூடாரம் அடிச்சுட்டீங்களே- இங்கே பேய் பிசாசு உபத்திரவம் ரொம்ப இருக்குமே. வேறெ எங்கேன்னு காம்ப் பண்ணப் படாதோ?"

"முட்டாள்! உளறாதே! நானா ஒங்க பேய் பிசாசுகளுக்குப் பயப்படுகிறவன்! ஏ ஜவான், இந்தப் போக்கிரியை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளு" என்று கத்தினார் கரடி ராயர். காளையப்பண்ணு முசல் தீக்ஷிதரைக் கறகற என்று இழுத்துக் கொண்டு போய்க் காட்டுக்கு வெளியே விட்டு வந்தான்.

ராத்திரி படுக்கும் நேரம் ஆச்சு. கரடிராயருக்குக் கொஞ்சம் பயம் தட்டியது நெஞ்சிலே. அவருக்குப் பேய் பிசாசுகள் என்றாலே கொஞ்சம் பயந்தான். பயம் தீர படுக்கைக்குப் பக்கத்திலே மேஜைமேல் ரேடியோவைத் திருப்பி வைத்தார். பெட்ரோமாக்ஸ் விளக்கை நன்றாக எரியப் பண்ணினார். தலையணைக்குக் கீழே கைத்துப்பாக்கியும் டார்ச் லைட்டும் எடுத்து வைத்துக் கொண்டார். கழுதைச் சாமியையும் காளையப்பண்ணுவையும் கட்டிலுக்கு இரண்டு பக்கத்திலும் படுத்துக்கொள்ள ஏற்பாடு செய்தார். திம்மராயனைத் தலைப் பக்கத்தில் படுக்க ஏற்பாடு செய்தார். கொசு- வலைக்குள்ளே புகுந்து குறட்டைவிட்டுத் தூங்கத்தொடங்கினார்.

நடு ராத்திரி. காட்டுப் பூனை அக்கா சந்தடி பண்ணாமல் வந்து விளக்கை அணைத்தாள். அணிலப்பன் வந்து டார்ச் லைட்டைத் திருடிக்கொண்டு போய்விட்டான். கொக்குத்துரைச்சாமிபிள்ளை வந்து துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு போய்விட்டான். குரங்குகள் எல்லாம் ஆலமரத்தை உலுப்பின. ஆலம்பழங்கள் "சொடசொட

படபட" என்று மழைபோலவிழுந்தன. கரடிராயர் "திம்மா! திம்மா!" என்று கத்திக்கொண்டே பதறி எழுந்தார். தொட்டில் போல கட்டில் ஆடிக்கொண்டிருந்தது. அடர்ந்த புதர்களின் மறைவிலே இருந்த யானை அண்ணாவை யாருமே பார்க்கவில்லை. அவர்தான் கட்டிலை ஆட்டிக் கொண்டிருந்தவர். கரடி ராயர் "ஆ! ஊ!" என்று கத்திக் கொண்டு இருட்டிலே திரும்பிப்பார்த்தார். எங்கே பார்த்தாலும் டார்ச் லைட் மாதிரி ஆந்தைகள் கண்ணை உருட்டி விழித்தன. யாரோ கழுதைச்சாமியின் காலையும் கையையும் கட்டிப்போட்டு விட்டார்கள். அதனாலே அவர் "ஆங்! எங்! ஆங்! ஏங்!" என்று கழுதைக் காம்போதி ராகத்திலே கத்திக்கொண்டிருந்தார். காளையப்பண்ணாவை யாரோ மரத்தோடு கட்டிப்போட்டுவிட்டார்கள். அவர் முக்காரம் போட்டுக் கத்திக் கொண்டிருந்தார். கொக்குத் "துரைச்சாமி! டப் டுப்" என்று பல தடவை துப்பாக்கியாலே சுட்டார். காட்டிலிருந்த மிருகங்களும் பறவைகளும் ஏககாலத்திலே ஒரு முறை கத்தின. கரடி ராயருக்கு ஒரே நடுக்கம். ஜுரம்கூட வந்துவிட்டது.

பொழுது விடிந்தது. கரடி ராயர் பரபரப்பாகச் சாமான்களை எல்லாம் மூட்டை கட்டினார்...கொஞ்சநாட்களுக்குப் பிறகு, கரடிராயர்காட்டிலாகா உத்தியோகத்தையே ராஜிநாமா பண்ணி விட்டதாகச்செய்தி எங்கும் பரவி விட்டது.

## அம்மா முகத்திலே கண்டேனே.

வண்ணச் செந்தாமரை அழகென்பார்-அந்தி
வானத்தில் செங்கதிர் அழகென்பார்-மண்ணில்
எண்ணிச் சொல்லும் பல அழகெல்லாம்-கண்டேன்
என் அம்மா முகத்திலே கண்டேனே.

மின்னும் பொன் மணிகளை அழகென்பார்-விண்ணில்
மீனங்கள் பலதனி அழகென்பார்-மண்ணில்
இன்னும் தோன்றிடும்பல அழகெல்லாம்-நித்தம்
என்அம்மா முகத்திலே கண்டேனே.

முழுநீலக் கடலிலே புதும் அழகும்-அந்த
முடிவில்லா வானிலே வளர் அழகும்-ஓங்கி
எழுநீல மலைகளில் புதும் அழகும்-எல்லாம்
என் அம்மா முகத்திலே கண்டேனே.

ஏங்கி அழும் பொழுதிலே எடுத்தணைத்துத்-தேற்றி
இன்னமுதம் ஊட்டிடும் பேரன்பே-என்னைத்
தாங்கி வளர்த்திடும் தனி அழகென்று-கண்டேன்
தாய்முகத்தின் அழகெனக் கண்டேனே.

# ரணகேஸரி

"அம்மா! அம்மா! குழந்தை கீழே விழுந்துவிட்டான் அம்மா! ஓடிவாயேன் நெற்றியில்காயம்பட்டு ரத்தம் கொட்டுகிறதே......அம்மா!

கமலம்:— ஐயோ! என்னடி! இப்படியா அஜாக்ரதையாய் ஆட்டிக் குழந்தையின் மண்டையை உடைப்பது? பக்கத்தாத்து பாட்டியையாவது கூப்பிடேன்...

ஆ! அதோ பாட்டியே வருகிறுர். நாருயிசு பாட்டி உங்களுக்கு...... குழந்தை கீழே விழுந்து ரத்தமாய் கொட்டுகிறதே என்ன பண்ணறது பாட்டி. பயமாயிருக்கே...

பாட்டி:—ஒன்னும் பயப்படாதே. குடும்பத்தில் குழந்தைகளுக்கு இது மாதிரி நேருவது சகஜந்தானே! இதற்கெல்லாம் பயந்துவிட்டால் முடியுமா? இந்த சின்ன சமாச்சாரத்திற்கெல்லாம் டாக்டரைத் தேடிப் போவதென்றுல் நம்மைப் போன்ற ஏழைகளுக்கு முடியுமா!

வெற்றிலே, மூணுது, (சுண்ணும்பு) பாக்கு இம்மூன்றையும் எடுத்துக் கொண்டுவா. இதை நன்ருய் கல்லில் வைத்து ஜலம்விடாமல் வெண்ணெய்போல் அறைத்து நெற்றியில் காயத்தின்மேல் நன்ருக ஒட்டவைத்து ஒரு வெத்திலேயை மேலே வைத்து மூடி பஞ்சு இருந்தால் கொஞ்சம்வைத்துத் துணியால்கட்டிவிடு. அதைத் தொடாமலிரு. காயம் ஆறின பிறகு தானுக அந்த மருந்து கீழேவிழும். சீ பிடிக்காது. மிகவும் நல்ல மருந்து—என்று சொல்லி மூன்றையும் (சுண்ணும்பு கொஞ்சம் அதிகம் வேணும்) கல்லில் நன்ருக மைபோல் அறைத்து காயம்பட்ட இடத்தில் கட்டினுள். ரத்தம் கசிவது நின்றுவிட்டது.

கமலம்:— இதற்குத்தான் அநுபவம் வாய்ந்த பாட்டிகளின் ஆதரவு வேண்டும் என்பது. மிக்க வந்தனம் பாட்டி. மஞ்சள் குங்குமம் வாங்கிண்டுபோங்கள்.

கமலத்தின் பர்த்தா மறுநாள் சாயங்கிரந்தான் ஊரிலிருந்து வந்தான். குழந்தையைப்பார்த்துநெற்றியில் என்ன காயம் என்று பதறினுன். விஷயத்தை அறிந்ததும் "உடனே டாக்டரிடம் போகாமல் இதென்ன பைத்தியக்காரக் கட்டு கொண்டா இப்படி குழந்தையை!" என்று கூறி டாக்டரிடம் எடுத்துக் கொண்டு ஓடினுன். டாக்டர் ராகவன் குழந்தையைப் பார்த்துவிட்டு "ஏதோ மருந்துபோட்டிருக்கிறதே! இது என்ன மருந்து?" என்று கேட்டார். அதற்கு அலக்ஷியமாக நடந்ததைச்சொல்லி "இம்மாதிரியாகஒரு பாட்டி அறைத்துத் தடவினுளாம். சுத்த நாட்டுப்புறம்"...என்ருன்.

டாக்டர்:—இம்மருந்துமிகவும்நன்ருய் நெற்றியோடு நெற்றியாய் ஒட்டிக்கொண்டிருக்கிறது; சீபிடிக்கவேயில்லே. இதுமிகவும் மேன்மையான மருந்து என்று எனக்கே தெரியும். பயப்படவேண்டாம் இது தானுக உலர்ந்துவிழுந்துவிடும். ஜலம்மட்டும் கொட்டாதீர்கள்"

பத்மநாபனின் வியப்பு கூறத்திறமில்லே. காயம் ஆறியதைப் பார்த்த பிறகு இந்த 3 மங்கள வஸ்துக்களின் மகிமையை அவனே வாய்ப்ரசாரம் செய்யத்தொடங்கினுன்.

உதய சூரியன்
இரண்டாம் பதிப்பு
தயாராகி வருகிறது

ஸ்ரீமதி வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்.

# புத்தி வருமா ?

"அம்மா ! பால் ! பால் !"

"இதோ வரேன்" என்று காமாக்ஷி பாத்திரத்தைக் கொண்டுவந்து பாலை வாங்கினாள். அதைப் பார்த்தவுடனே அப்படியே அவன் தலையில் ஊற்றி விடலாமா என்று ஆத்திரம் பிறிக் கொண்டு வந்தது.

"அட பாவி! இப்படிப்பட்ட பச்சைத் தண்ணியை ஊற்றுகிறாயே. தண்ணி விடுவதற்கும் ஒரு வரம்பு கிடையாதா? அப்போது உன் கை கூடவா கூசல்லே? சுளைசுளையாய் பணம் வாங்குகிறாயே, அது உனக்கு ஜீர்ணிக்குமா ? உன் பிள்ளைகுட்டி நன்றாயிருக்குமா? என் குழந்தைகளுக்கு நீ இப்பேர்ப்பட்ட தண்ணிப் பாலைக் கொடுத்தால் பச்சைக் குழந்தைக்கும் நோயாளி கிழவிக்கும் இப்படிப்பட்ட அனியாயமாடா செய்யறது? நீ என்ன சாகா வரமா வாங்கிக் கொண்டு சிரஞ்சீவியாய்வந்தாய்! சண்டாளா! கேவலம் ஒரு ஆழாக்குபாலுக்கு ஒரு படி தண்ணியைக் கொட்டுகிறாயே, செத்தால் எமனிடம் பதில் சொல்ல வேண்டுமே என்ற பயம் கூடவா இல்லே! இந்த பாவம் உன் குடும்பத்தையே ஏழேழு ஜன்மத்திற்கு சுற்றிச் சுற்றி அடிக்கும். சும்மா விடாது. நீ எங்குபோனால்தான் இந்த பாவம் தீரும்? எங்களை வேண்டுமானால் ஏமாற்றி விடலாம். எமனை ஏமாற்ற முடியாது. பத்திரம்... பக்கத்து வீட்டிறகுப் பால் போடுகிறானே, அவன் இத்தகைய அநியாயம் செய்வதில்லே. பால்காரர்களில்கூட யோக்யமாயும் பாவத்திற்கு பயந்தும் நடப்பவர்கள் இருக்கிறார்கள்" என்று வயிற்றெரிச்சல் தீரக் கத்தினாள்.

"ஆமாம். பாவத்தைக் கண்டா, புண்ணியத்தைக் கண்டா. அதிகம் பேசாதேம்மா. இஷ்டம் இருந்தால் வாங்கு, இல்லாவிட்டா வாடிக் கையை விட்டுவிடு" என்று முடுக்காகசொல்லிக்கொண்டேபோனான்.

* * * *

'ழ ழ ழ' என்று வாய் குழறல் கேட்டதும் சுந்தரி அலறி அடித்துக் கொண்டு எழுந்தாள். தன் கணவன் தலைமுதல் கால்வரை நடுங்கியவாறே வெயர்வை வழிய உளறிக் கொண்டிருந்ததைப் பார்த்து நடுங்கி அவனை குலுக்கிக் குலுக்கி எழுப்பினாள். அப்பொழுதுதான் தன் நினைவுபெற்றுக் கண்ணைத்துடைத்துக் கொண்டு எழுந்தான்.

"அப்பாடா! இது சொப்பனம் தானா? நிஜம் என்று தான் பயந்து குளறி விட்டேன். அம்மாடி! என்ன பயங்கர சொப்பனம்? நினைத்தாலே நடுங்குகிறது. நிஜமாவே செத்தால் அப்படித்தான் நடக்குமோ !

"என்ன அப்படி பயங்கர சொப்பனம் கண்டே, சொல்லேன்" என்றாள் மனைவி.

"ஐயோ ! சொல்லவும் பயம் நடுங்குகிறது."

நாலு யெமகிங்கரர்களாக வந்து இழுத்துக்கொண்டு போனார்கள். அவர்கள் மூஞ்சி இருந்த பயங்கரத்தை நினைத்தாலே நடுங்குகிறது என்னை எமன்கிட்டே நிக்கவெச்சார்கள். எமன் பலமான உருமலுடன், "ஊம். இவன் என்னென்ன பாவம் பண்ணியிருக்கிறான் பாரு" என்று உத்தரவு போட்டான்.

உடனே ஒரு அம்மாள் வந்து "இவன் படுபாவி; கொலைகாரன்

எருமைப்பாலில் தண்ணியைக் கொட்டி பசும்பால் என்று ஏமாத்தி ஊற்றிவந்தான். நான் அவன் வார்த்தையை நம்பி அதைக் குழந்தைக்குப் போட்டுவந்தேன். அதனால்குழந்தைக்கு வயத்தில்கட்டிவந்து இறந்துவிட்டது......படுபாவி, சண்டாளா! என்று வயிறெரியத் திட்டினாள்.

அவள் வாய் மூடுமுன் நம்ப குட்டை பசு வந்தது என்னைபார்த்ததும் முட்டி முட்டித் தள்ள வந்தது. 'இவன் படுபாவி, கிராதகன், நெஞ்சில் ஈரமே கிடையாது. என் குழந்தைக்கு ஒரு பில் பால்கூட விடாது வொட்டக் கறந்து என் குழந்தையைக் கொன்ருன். அதே கவலேயில் நானும் இறந்தேன். என்னை லக்ஷ்மியின் ஸ்வரூபம் என்று எல்லாரும் பூஜை செய்வதுபோக இவன் எங்களைக் கொலெசெய்யத் துணிந்தான். கொலைப் பாதகா!' என்று உறுமியது. அடுத்த க்ஷணமே, பகவானே வந்து "என் பரமபக்தன் ஒருவன் என்னிடம் இருக்கும் பக்தியில் இவனிடம் பாலேவாங்கி என்னை பாலிலேயே அபிஷேகம் செய்து, பால் நிவேதனம் தவருது செய்து வருவான். தெய்வத்திற்கு என்றுகூடக் கவனியாது வெறும் வெள்ளைத் தண்ணிதான் தருவான் இவன். சரியான பழிவாங்குங்கள்" என்று உத்திரவிட்டார்.

யமதர்மராஜன் ஆத்திரமாக "சித்ரகுப்தா! இவன் செய்த பாவங்களுக்கு என்ன தண்டனை?" என்று கேட்டான்.

அப்பா!, அவன் சொன்ன தண்டனையை நினைத்தால் இப்பொழுதுகூட நடுங்குகிறது. எவ்வளவு கடும் தண்டனை தெரியுமா!...ஒரு சாக்கடையை காட்டினான். ஐயையோ! அதில் இருக்கும் ஆபாஸம் சொல்ல முடியாது. மலம், மூத்திரம், சீ, இரத்தம், அழுகிப்போன பிண்டங்கள், சேறு இன்னும்எவ்வளவோ சொல்ல முடியாது. அதையெல்லாம் காட்டி "இவன் தின்னவேண்டும்" என்ருன்: அதைக்கேட்டதுமே என்னை அப்படியே நெருப்பில் போட்டதுபோலிருந்தது. குளறிவிட்டேன். அப்போதுதான் நீஎன்னை எழுப்பினாய். போருமா சொப்பனத்தின் பயங்கரம்!... இன்று சாயந்தரம் காமாக்ஷி அம்மாவூட்டுக்குப் பால்போட போனேன். நிஜமாகவே அதில் தண்ணி தவிர வேறில்லே. அந்த அம்மா 'உனக்குச் சாவுகிடையாதா, எமனிடம் என்ன பதில் சொல்லுவாய்? என்று கன்னா பின்னா என்று திட்டினாங்க. அதே நினைவாகப் படுத்தேன் இந்த கனா வந்துட்டதுபோலிருக்கு' இன்று எவ்வளவு பால்கறந்தது நம்ப பசுவும் எருமையும்?" என்ருன்.

இன்று பசு கால்படி, எருமை முக்கால்படி. நம்ப வாடிக்கை காலரைப்படி. அதுக்கு சரியாய் விளாவிவிட்டேன். பாவம் புண்ணியம் அதெல்லாம் யார் கண்டா? இப்படி செய்துபிழைக்காட்டா சொந்த வீடு, காப்பு,கொலுஸு, துணிமணி, நல்ல சாப்பாடு, இதுஎல்லாம் எப்படி முடியும்? போயேன்! பயமாம்... எமனும் பார்க்கலாமே...பயித்தியக்காரன். என்று தூக்கிபோட்டார்ப் போல் சொன்னாள்.

கணவன் :—போடீ ராக்ஷஸி,! தண்ணீர் கொட்டுவதற்கும் ஒரு வரம்பில்லேயா! இப்படித் தண்ணீர் பாலே விற்றுப் பிழைப்பதைவிட எங்காவது சித்தாள் வேலேசெய்து பிழைக்கலாம். இனிமேல் இந்த அக்ரமப் பிழைப்பு எனக்கு வேண்டாம். அந்த வ்யாபாரத்தை நிறுத்திவிடுகிறேன். பாவத்திற்கும் பயப்படாமல் இனி நான் நடக்கமாட்டேன். பத்திரம்—என்று கர்ஜித்தான்.

# மதுமா? மனமா?

**வை. மு. ஸ்ரீ.**

## 1. சேற்றில் முளைத்த செந்தாமரை.

"உலகளந்த உத்தமா! உன் பொன்னடிகள் போற்றி" என்று ஆரம்பிக்கும் இசையமுதத்தைப் பொழியலானார்கள் நாராயணகிரி பஜனை கோஷ்டியினர், பிரதக்ஷணம்செய்துகொண்டே. உதயசூரியன் தோன்றும் தருணம்; வானை வளைத்த ஓவியன் அதில் மேக வர்ணத்தைத் தீட்டிக்கொண்டிருந்தான். இயற்கையின் எழிலில் தெய்வப்பொலிவைக் கண்டுகொண்டிருந்த பக்தர்கள் "நாராயணனை நாடு! அவன் நாம பஜனமே பாடு" என்று பகவந்நாம ஸ்மரணை செய்தவாறு தங்கள் பிரதக்ஷணத்தைத் தொடரலானார்கள்.



மாதம் மார்கழி என்று சொல்லத் தேவையில்லை. அந்தப் புனித மாதத்தில்தான் பக்தர்களின் அன்பு அபரிமிதமாய்க் கொட்டிக் குமுறுகிறது. ஆண்டாள் ஆராதித்த ஆண்டவன் எல்லோர் ஆவியையும் தொட்டிழுக்கின்றான். இயற்கையின் அழகும், இன்னிசையின் சுவையும், உள்ளத்தின் கனிவும் ஒருங்கே சேர்ந்து எல்லோரையும் — பக்திப் பெருக்கெடுத்து உள்ளம் உருகி நிற்பவர்களெல்லோரையும் — கோவிந்தக் காதலராக்கிவிடுகின்றன.



நாராயணகிரி கிராமத்தில் அத்தகையக் காதலர்களுக்குக் குறைவில்லை. உள்ளம்கொள்ளைகொண்ட மோகனன் கையில் தம்மை ஈந்துப் பரவசமாகும் பக்தமணிகள் சிலர் தமது பந்துமித்திரர்களுடன் தினமும் அருணோதயத்தின்போது பஜனை ஊர்வலம் வருவது வழக்கம் அந்த அக்ரகாரத்தில். இந்த பஜனையில் கலந்துகொள்ளச் சக்தியில்லாத ஒரு ஆத்மா, தெருக்கோடியில் நின்றவாறே இப் பஜனம்ருதத்தைப்பருகி மெய்ம்மறந்து நிற்பது வழக்கம், நயன நீர் நிலத்தில் விழுந்தவாறே.

மனப்புயலும் தீராப் பிரச்னையுமாகவே காலச்சக்கரம் சுழன்றுகொண்டேயிருப்பதைக் கண்ட அப் புனிதன் தனக்குத் தானே பல கேள்விகளைக் கேட்கலானான். "மாதவா! நீ இல்லாத வாழ்வு மண்புழு வாழ்க்கையன்றோ? உன்னைப் பற்றியல்லாத கீதம் வெறும் கூச்சலன்றோ? "வீரன், இருளன், காட்டேறி" என்றெல்லாம் காட்டுக் கத்தல் போடும் கூட்டத்தில்தானா நான் இருக்கவேண்டும்? "நாராயணனை நாடு! அவன் நாம பஜனமே பாடு" என்று அதோ அந்தணர்கள் பாடி வருகிறார்களே, அந்தக் கூட்டத்தில் அவர்கள் அடியார்களாக ஏன் நானும் என் மக்களும் சேர்ந்துவந்து உன் புகழைப் பாடக்கூடாது? எல்லோரும் உன் குழந்தைகள்தானே? எனக்கு நல்ல மனதையும்மதியையும்மட்டும் அளித்தாயே; விதியைமட்டும் ஏன் சரியாக அமைக்கவில்லை?" என்று.

நாராயணகிரியின் இந்த ஹரிஜன பக்தன் வேறு யாருமில்லை. வீரபத்ரன்தான். பெயருக்கேற்றபடி பயங்கரமானவனல்ல அவன். சாந்தமூர்த்தியென்று அழைக்கத்தகுந்த அப்பேர்ப்பட்ட குணவந்தன். அந்த அக்ரகாரத்தில் அவனிடத்தில் எல்லோருக்கும் நல்ல மதிப்புதான். இருப்பினும், கிராமக்கட்டுப்பாடும் அக்ரகார வாழ்க்கைத் திட்டங்களும் கடுமையாயிருந்தமையால் வீரபத்ரனின் பேரவா நிறைவேறுவதற்கு வழியேயில்லாதிருந்தது. "மதமா, மனமா?" என்ற கேள்வியையே



அவன் திரும்பத்திரும்பக் கேட்டுக்கொள்வான். "இந்த நாராயணகிரியில் எல்லோரும் நாராயண மதந்தான்! நான் ஒரு பஞ்சமன், இருப்பினும் என் மனம் நாராயணனைத்தான் நாடுகிறது. பின் ஏன் இந்த நாராயணன் இவ்வளவு கல்நெஞ்சுடனிருக்கிறார்?" என்றெல்லாம் ஏங்குவான்.

*   *   *   *

அக்ரகாரத்தில் நல்ல அந்தஸ்தில் பிறப்பித்திருக்கவேண்டிய கடவுள் இவனை என்ன காரணத்தினாலோ சேரியில் பிறப்பித்துவிட்டார். அந்த ஒரு குறை தவிர, அவனுக்கு வேறு குறை செய்யவில்லை அந்த அகில லோக சூத்ரதாரி. தேனும் பாலும் போல், மலரும் மணமும்போல், வீணையும் தந்தியும்போல், நாதமும் ஜீவனும்போல், ஒன்றுபட்டு வாழும் தாம்பத்ய சம்பத்தை அருளியிருந்தார். காளியம்மை உண்மையில் பசுவைப்போல் சாதுவானவள். வெளியழகைப் பெரிதும் படைத்திராவிடினும் அளவற்ற உள்ளழகு நிறைந்தவள். இவளே ஒரு செல்வக் குடும்பத்தில் பிறந்து இத்தகைய குணவிசேஷத்துடனிருப்பின் இவளை "ஆதர்சப் பெண்மணி" என்றெல்லாம் பெருமைப்படுத்தியிருப்பர் இவளது சுற்றத்தார். காட்டில் காய்ந்த நிலவு போலும், சேற்றில் முளைத்த செந்தாமரைபோலும், இந்தத் தம்பதிகளின் ஜீவப்படகு செல்லலாயிற்று.

உயர் வாழ்வு வாழ்ந்துவந்த இந்த ஏழைத் தம்பதிகளுக்கு நிகரற்ற செல்வமாய்க் கண்ணென விளங்கியது இவர்களது காதலின் கனியாய் உருவெடுத்த மாரியம்மா தவிர வேறெதுவுமில்லை. கண்ணின் கருமணியைக் காப்பதைவிட இமைகளுக்கு வேறென்ன வேலை?

*   *   *

பன்னிரண்டு வருடங்கள் உருண்டோடிவிட்டன. வீரபத்திரன் உள்ளத்தில் பலதினுசான அலைகள் மோதஆரம்பித்தன. அவனது பக்தி உணர்ச்சி நாளுக்குநாள், நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்து வருவதேபோல், தன் பெண்ணைப் படிக்க வைக்க வேண்டும், உயர் நிலைக்குக் கொண்டுவரவேணுமென்ற ஆவல் தீவிரமாக ஏற்பட்டது. அந்தக் கிராமத்தில் அது எப்படிசாத்தியம்?



வை. மு. ஸ்ரீநிவாஸன்

"பட்டணம் சென்றால் பலவிதத்திலும் அனுகூலமுண்டு. தர்மப் பள்ளிக்கூடத்தில் பெண்ணைப் படிக்க வைக்கலாம். நான் பஞ்சமன் என்று அங்கு யாருக்கும் தெரியாதாகையால், திருட்டுத்தனமாகக் கோவிலுக்குச்சென்று என்னப்பனை ஸேவிக்கலாம்; அது பாவமேயில்லை. இங்குதான் அக்கிரகாரக் கட்டுப்பாடு தலைவிரித்தாடுகிறது, என் ஐயனைக்கூடக் காணவொட்டாது. இனி இந்தக் கிராமம் எனக்குச் சரியான இடமில்லை. நரசிங்கப் பட்டணம்தான் எனக்கு அடைக்கலம் அளிக்கவேண்டும். மனதுக்கு நிம்மதியும் குதூகலமும் அவசியம்" என்று எண்ணலானான் வீரபத்ரன்.

"நம் கையைக்கொண்டு உழைத்தால் கால் வயிறுக் கஞ்சியகப்படாது போய்விடுமாயென்ன? எந்த வேலை கிடைத்தாலும் சரி; சத்தியத்திற்குக் கட்டுப்பட்டுச் செய்யும் எந்தத் தொழிலும் சர்வேச்வரனின் கிருபைக்குப் பாத்திரமாக்கும் நம்மை" என்று காளியம்மை சொல்வதைக்கேட்டுப் பூரித்துப் போனான் வீரபத்திரன்.


"பட்டினமா? படிப்பா! என்ன அதிர்ஷ்டம் எனக்கு!" என்று குதித்தாள் மாரியம்மா.

"கிராமமே கதியென்றிருந்துவிட்ட எனக்குப் பட்டணத்தில் என்ன தொழில் தெரியும்? மாட்டு வண்டியோட்டும் வேலை கிடைத்தால்கூட போதும்" என்றான் வீரபத்திரன்.

* * * *

பட்டணத்திற்கு வந்து ஒரு வாரமாயிற்று. எங்கும் வேலை கிடைக்கவில்லை; ஆனால் தர்ம சத்திரங்களில் அன்னதானம் கிடைத்தது. இதைவிட முக்கியமானது அவனுக்கு ஸ்வாமி தரிசனம் கிடைத்தது. கட்டாயம் கடவுள் வழிகாட்டுவார் என்ற நம்பிக்கையிலிருந்த அவனுக்குக் குப்பை வண்டி ஓட்டும் வேலை கிடைத்தது. அதையும் குதூகலத்துடன் எற்றுக்கொண்டான். பக்தர்களும் அடியார்களும் மிதித்த குப்பையை வாருவதில் சந்தோஷமே கொண்டான். 'வீட்டைச் சுத்தம் செய்வதேபோலத்தானே வீதியைச் சுத்தம்செய்வதும்' என்ற மனப்பான்மையிலேயே இருந்து வந்தான். மாரியம்மா பள்ளிக்கூடம் செல்வதும், காளியம்மை கூலிவேலை செய்வதும் வீரபத்திரனுக்கு அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தன. மூவரும் த்ருப்திகரமாக, ஆனந்தமாக வாழ்க்கை நடத்தினர். நிறைந்த மனமே நிகரற்ற செல்வம்.

* * * *



# ரஸனை

## 1

ஸ்ரீ வெ. ரங்கநாயகி

'ரஸிகத்தன்மை என்பது என்ன? அது எல்லாரிடமும் உண்டா?' என்றால் உலகில் மானிடராய்ப் பிறந்த எவரும் ரசிகத்தன்மையில்லாயவிருக்கமாட்டார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொரு விஷயத்திலாவது ரஸித்துக்கொண்டுதான் இருப்பார்கள். அப்படி ஒன்றிலும் ரஸிகத் தன்மையில்லாதவர்களை ஜடஸ்வபாவத்தில் சேர்ந்தவர்களெனக் கட்டாயமாய்க் கருதலாம். அனேகம் பேர்களை ரஸிக்கச்செய்யும்தன்மை சிலரிடம்தான் காணலாம்.

ஒருவர் சகல கலைகளையும் கற்றிருக்கலாம். அவர் வயிற்றுக்குள் கலை நிரம்பியிருக்கும். ஆனல் அவர் சபைக்கு வந்து ஒரு விஷயத்தையெடுத்துப் பேசும்போது ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் 'அப்பேர்க்கொத்த ராமன்; அப்பேர்க்கொத்த கிருஷ்ணன்'என்று சொன்னதையே திருப்பித்திருப்பி சொல்லி ரஸிகர்களை ரஸிக்கவிடாமல் செய்து விடுவார். ஒருவருக்கு ஒன்றுமே தெரியாமலிருந்தும், நாலிடஞ் சென்று நாலுபேர் சொல்வதைக் கேட்டு, தன்னிடம் இருக்கும் சரக்குகளையும் கூடச் சேர்த்து சாலக்காய் அவர் பேசப்புகுந்தால் அந்த ரஸனையில் தேன் ஒழுகி அமுதமொழியாயிருக்கிறதென்று கூறிக்கொண்டே அதைப் பலபேர் கேட்டு ரஸிக்கும்படியாய்விடும். இது அவரவர் பிறவியிலேயே அமையும் ரஸனையாகும்.

திருப்பாவை 14ம் பாட்டில் நாணதாய்நாவுடையாய் என்றுள் கோதை நாச்சியார் தன் தோழியைப்பார்த்து. அதன் கருத்தாவது:—எங்கள் நாவு போலவா நீ நாவு படைத்தாய். உன் பேச்சின் இனிமையைக் காண உனக்கு நாங்கள் பஞ்சலக்ஷம் குடிப்பெண்களும் உன் நாவின்கீழ் அடிமையிலும் அடிமையாய்விடுகிறோம். நீ ஒருத்தியில்லாவிட்டால் இத்திரளில் நாம் எடுத்த காரியம் முடிவு பெறாது. தயை செய்வாய், உன் நாவில்அவ்விதரஸிகத்தன்மையுள்ள அமுதமொழி சொரிகின்றது.

ஸ்ரீ ராமபிரான் பஞ்சவடியில் சீதையைப் பிரிந்தபின் கிஷ்கிந்தையுள் புகுந்து அநுமாரைப்பார்த்து அவர்பேச்சின் இனிமையைக் கண்டு அவரது நாவன்மையையுகந்து எண்ணத்திறமற்ற வானரவீரர்களிருக்க அநுமானின் நாவிலுள்ள ரஸிகத்தன்மையையுணர்ந்து ஆஞ்சாஞ்சு பார்த்து நமக்கு உண்மையான நேயன் இவன்தான் என அறிந்து ஆஞ்சநேயர் என்னும் திருநாமத்தைச்சூட்டி மோதிரத்தையிட்டு லங்கைக்குஅனுப்பிவைத்தார். இலங்கையில் மோதிரத்தைஇட்டுவாயென்றால் ஆஞ்சநேயர் இலங்கையையே சுட்டுவந்தார். இப்போதும் நாம் இட்டுவாயென்றல் சுட்டு வருகிறது நல்ல சமத்து என்று பழமொழியாய்க் கூறுகிறோம்.

ஜகன்மோகினி 20-வது ஆண்டு மலரில் ஸ்ரீமதி ஸி. ஸரஸ்வதிபாய் எழுதிய 'ஹரிகதையின் மேன்மை' என்கிற அரிய வியாசத்தில் ஓர் உத்தம பாகவதர் தன் ஹரிக்தாகால க்ஷேபத்தை, அஜீர்ண ரோகத்தினல் தூக்கம்பிடியாமலிருந்த ராஜாக்களி

னிடையில் செய்து அவர்களை சுவாரஸ்யமாய் தூங்கச்செய்வதற்கே உபயோகித்ததாகவும் கடைசியில் அதற்காகத் தான் வருந்தியதாகவும் எழுதியுள்ளார். உன்னதரஸிகர்கள் இல்லாத சபையில் சங்கீதமோ, ஹரிகதா காலக்ஷேபமோ, உபந்நியாசமோ எது நடந்தாலும் கச்சேரி நடத்துபவர்களின் நாவின் ரஸிகத் தன்மை பயன்படாமல் போகிறது. அன்னவர் 21-வது ஆண்டு மலரில் தெரிவித்ததுபோல் ரஸிகர்களின் வேற்றுமை ஏற்பட்டாலும் வித்தை பிரகாசியாமல் போய்விடுகிறது. ஓர் சபையென்றால் வித்வான்களுடைய நாவின் ரஸிகத்தன்மையும் வேணும்; கேட்பவர்களிடையே சுவாரஸ்யமான ரசிகத்தன்மையும் வேணும். இரண்டும் இருந்தால்தான் அச்சபை தினேதினே விருத்திக்கு வந்து பரிமளிக்கின்றது.

இக்காலத்தில் முன் காலத்தைவிட ரஸிக்கச் செய்யும் திறமையுடையவர்களும் அதனையறிந்து ரஸிப்பவர்களும் ஏராளமாய் விருத்தியாகிறார்கள்.

இந்த யுத்தகாலத்தில் எல்லாம் பஞ்சமென்று வாயளவில் சொல்லுகிறோம். அதிலும் பேப்பர் பஞ்சமென்று கதறுகிறார்கள். இருப்பினும் ஏராளமான ரஸிகத்தன்மையுடைய பத்திரிகைகள் வெளிவருகின்றன. அதைப் படித்து நாமும் ரஸிக்கின்றோம். மெய்யடியார் செய்யும் துதியாகிய ரஸனையில் பகவானே ரஸிக்கிறார் என்பது பெரியோர்கொள்கை. ஒரு சாதுர்யமான ரஸனையுடைய நாவையுடையவராயிருந்தால் அவரை எல்லாரும் தெய்வமெனக்கொண்டாடுவார்கள். அவர்கள் தங்கள் நாவின் வல்லமையால் தங்கள் காரியத்தை எளிதில் சாதித்துக் கொள்வார்களென்பதில் ஐயமில்லை. ஒருவர் சாதுர்யமாய் ரஸனையாய்ப் பேசுவதைப் பார்த்து சிலர் தானும் அப்படியே பேசுவதாக நினைத்துப்பேசுவார்கள். ஆனால் அது கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழியாய்விடும். எதுவும் அவரவர் பிறவியிலேயே வாய்ப்பதுதான் சோபிக்கின்றது.

ஸ்ரீ ராமாநுஜருடைய நாவின் ரஸனையில் பகவானாகிற குருங்குடி நம்பியே ரஸித்துக்கொண்டு ராமாநுஜருக்கு தானும் சிஷ்யராய் விட்டார். வடுகநம்பி யென்பவர் "ஆசார்ய பூர்த்தியென்பது ஒன்று உண்டு, அது உள்ளது ராமானுஜர் ஒருவருக்குத்தான்" என்றார்.

ஒரு குடும்பத்தில் ஒரு ஸ்திரீ ப்ரஸவவேதனைப்பட்டால் சிலர் அவளையும் அதைரியத்துக்குட்படுத்தி தாங்களும் அழ ஆரம்பித்துவிடுகிறார்கள். அதைத் தவிர்த்து சிலர் சிரிப்பும் விளையாட்டுமாக தங்கள் தைரியத்தினாலும் நாவின் ரஸனையினாலும் பேசி வேதனைப்படுமவர்களையும் வேதனை தெரியாமல் சிரிக்கும்படியாகச் செய்து காரியத்தைச் சாதித்துவிடுகிறார்கள். இது ப்ரத்யட்சத்தில் காணும் காட்சி.

குழந்தைகள் நோயுறுங்கால் வீட்டிலிருப்பவர்கள் நல்ல ரஸமுள்ள கதைகளையோ, வேடிக்கைப் பேச்சுகளையோ சாதுர்யமாய்ச் சொன்னால் குழந்தைகளும் ரஸித்துக்கொண்டே நோயை மறந்துவிடுவதைக் காணலாம். மிகவும் அதிகமாய்ப்படித்த வக்கீல்கள் சிலருக்கு நாவில் ரஸனையென்பது அமைவதில்லை. படிப்பு கம்மியாயிருந்தாலும் சிலவக்கீல்கள் தங்கள் நாவின் வல்லமையினால் ஜட்ஜும் ரஸனையில் மயங்கும்படியாய்ச் செய்து கேஸை ஜயித்துக்கொள்வதைக் கண்கூடாகக் காணலாம்.

அடுத்தபடி டாக்டர்களை எடுத்துக் கொள்வோம். சில டாக்டர்கள் தங்கள் ரஸனையுடைய நாவினால் தைரிய மொழிகளைக் கூறி தங்கள் வாக்குச் சாதுர்யத்தினாலும் நோயாளிகளை உத்சாகமுறச்செய்து தினே தினே தங்கள் ஔஷதத்துடன் கலந்த இன்ப அமுதமொழியால் நோயை வெருட்டிவிடுகின்றார்கள். இது என் அநுபவத்தில் கண்ட காட்சி. ஆனால் அது அவரவர் மனோபாவம்.

## 2

## ஸ்ரீமதி சிவகாமியம்மாள்

ரஸனை என்பது தெய்விக உணர்ச்சி. அது கல்லில் உறங்கி, புல்லில் தளிர்த்து, ஐம்பொறிகளின் வழியாக இதயத்தில் குடிகொண்டது. இதயப் பண்பாட்டிற்கேற்றாற் போல்தான் ஒவ்வொருவருக்கும் ரஸிகத்தன்மையிருக்கும். படித்தோராயிருந்தாலும், பாமரராயிருந்தாலும் இதயக்கோயில் எல்லோருக்கும் ஒன்றுதான். ரஸனையின்பரிபூரணத்வத்தையடைய வேண்டுமானால், கல்வி ஒரு சிறந்த சாதனமாயிருக்குமென்று சொல்வது மிகையாகாது. ஆனால், கல்வி படைத்தவன் கேவல இச்சைகளில் மனதைச் செலுத்தி, ரஸனையை விரஸமாக்கிக்கொண்டால், அது அவன் கற்ற கல்வியின் களங்கமாகும்.

கலாரஸனை, கதாரஸனை, கவிதா ரஸனை, காதல் ரஸனை இப்படி ரஸனைகளில் பலவகை உண்டு. மட்டமான ரஸிகனும் உயர்தர ரஸிகனுமுண்டு. மேனாட்டில் யாரோ ஒரு கவிஞர் எழுதிய கவிதைகளை 100க்கு 99பேர்கூட ரஸிக்க முடியாதாம். இதனால் கவிதைகள் மட்டரகமாயிருக்குமென்று யாரும் எண்ணிவிடாதீர்கள். அவையாவும் உயர்தரமானவையாம். எதாவதொரு கலையில் ஆர்வம் பெருகப் பெருகத்தான் ரசிகத்தன்மை விகசிதமடைகிறது.

ரஸிகத்தன்மையென்பது, ஐம்பொறிகளை அடக்கியாளக்கூடியது. அது ஐம்பொறிகளின் வழியாக மெய்க்கு உணர்த்துகிறது. மெய் ஏதோ ஒரு ஆனந்த எக்களிப்பில் தன்னை மறந்து மனங்குவிந்து பரவசமடைகிறது. நரம்புகள் ஒரு விரிய சக்தியை அடைந்து, இரத்தத்தில் ஒரு புத்துணர்ச்சியுண்டாகிறது இந்த ஆனந்தப் பெருக்கிற்கு ஆளாகாதவன் யாருமே இருக்கமுடியாது. 'கலையை ரஸிக்காதவன் கொலை செய்யக்கூட அஞ்சமாட்டான்' என்பது சிலர் அபிப்பிராயம். நம் அபிப்பிராயம் அதற்கும் மேலேபோய் விடுகிறது. கொலை செய்பவன் கலைகளில் மயங்குவதை நாம் பார்க்கலாம்! ஏன்? கொலைஞர்களே கலைஞர்களாகவுமிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது அந்த ஒரு சிலர் அபிப்பிராயமும் தவறுதான்.

ரஸனையைப்பற்றி ஒரு உதாரணம் சொல்லுகிறேன்:—அப்துல் காதர் என்ற பாடகன் மரண தண்டனை விதிக்கப்பட்டான். அவன் தண்டனையடையும் காலத்தில் 'உன் விருப்பம் என்ன?' என்று சிறை அதிகாரிகள் கேட்டனர். "ஹார்மோனியப் பெட்டியுடன் ஐந்து நிமிஷம் பாடுவதற்குஅனுமதிகொடுங்கள் அதுவே போதும்' என்று கேட்டு பெட்டிவைத்துக்கொண்டு காலத்திற்குரியவாறு பாடினான். பாடப்பாட அவனும் அதில் லயித்தான். சிறை அதிகாரிகளும் லயித்துவிட்டார்களாம். மரண தண்டனையே காலாவதியாகிவிட்டதாகச் சொல்கிறார்கள் இது தற்காலத்தில் நடந்த கதை. இவ்

வளவு ரஸனையுள்ள முற்காலக் கதைகள் எத்தனை வேண்டுமானாலும் எழுதலாம்.

ரஸனையென்பது அறிவின் உச்ச ஸ்தானமேயாகும். ஆனால், ஒரு அறிஞன் ஒரு தனிப்பட்ட கலையை ரஸிக்கமுடியாமலிருக்கலாம். இது அவன் குற்றமல்ல; அவன் அறிவு போகும் போக்கு. இந்த விதத்தில், பெண்களை எடுத்துக்கொண்டால் லளிதக் கலைகளில் மிகப் பிரியமிருக்கும் கோலம், கோலாட்டம், சங்கீதம், சமையல் இப்படி. வீரன் போர் கலையைத்தான் மிகவும் விரும்புவான். இதைத்தான் நான் முன்னே சொல்லியிருக்கிறேன், 'அவரவர் விருப்புக்கேற்றாற்போல்தான் ரஸிகத்தன்மையிருக்குமென்று. இந்த ரஸனைகள் வரம்பு மிஞ்சினால் விரஸமாய்விடும்.

ஆண்டாள் திருப்பாசுரம்போன்ற ஒரு காதல் பாட்டையெடுத்துக் கொண்டால் தெய்விக உணர்ச்சியுடன் கவனிக்கவேண்டும். அந்த உணர்ச்சி ஒரு மயிரிழை விலகினாலும் போதும்; விரஸந்தான்.

ரஸனையில் இன்னொரு வகையுண்டு. உதாரணமாக :—ஒரு சினிமாப்படத்தில் எதிரிகளையெல்லாம் கதாநாயகனின் குதிரையில் கட்டிவிட்டிருக்கிறார்கள். அது அத்தனை பேரையும் மேடு, பள்ளம் பாராமல் கல் மண் முதலியவற்றில் இழுத்துச் செல்கிறது. இந்தக் காட்சியைப் பார்த்துச் சிலர் கைதட்டிக் கரகோஷம் செய்கின்றனர். உண்மையில், எதிரியை கதாநாயகனைவிடக்கெட்டவனாக காட்டப்படவில்லை. எப்படியோ சினிமா பார்க்கும் சிலரின் மனோபாவம் எதிரியை கெட்டவனாக சித்திரித்துக்கொள்கிறது. உண்மையில் எதிரி கெட்டவனாக இருந்தபோதிலும், அந்தக் கண்றாவிக் காட்சியைப் பார்த்துக் கரகோஷம் செய்பவனை ஒரு ரஸிகனென்று ஏற்றுக் கொள்ளமுடியாது. இந்தக் கீழ்த்தரமான காட்சிகளையும் பாடல்களையும் ரஸிக்கும் தன்மை நம்மவர்களுக்கு ஏற்பட்டது எதனால்? அவர்களின் எண்ணங்களேயாகும். நல்லெண்ணமும், உயர்ந்த நோக்கமும், ஒழுக்கமான மனோநிலையும், நம்மவர் அடைந்தால்தான் ரஸிகத்தன்மையென்பது உயர்ந்த ரகமாயிருக்க முடியும்.

---

"ரஸனை என்கிற விஷயத்தைப்பற்றிய மிகவும் ரஸமானகட்டுரைகள் ஏராளமாக வரும். இத்தனை வேலைக்கு மத்தியில் அதைப்படிக்க அவகாசம் இருக்குமோ! இருக்காதோ! என்ன செய்வது?"... என்று முதலில் மிகவும் பயந்தேன். விஷயம் அவ்வளவு ரஸமானதானதால் ஏராளமான சகோதரிகள் பங்கெடுத்துக்கொள்வார்களென்று எதிர்பார்த்த நான் முற்றிலும் ஏமாற்றமே அடைந்தேன்.

மிகவும் சுலபமானதும் உயர்ந்த விஷயமானதுமான ரஸனையைப் பற்றி ரஸித்து நூறு சகோதரிகள்கூட எழுதாதது மிகவும் வருந்தத்தக்கதாகவிருக்கிறது. ரஸனைக் குறைவினால் எழுதவில்லையா! அன்றி அபார ரஸனையினால் எழுதாது ஆனந்தத்தில் தேங்கிவிட்டதா என்பது தெரியவில்லை. இதுகாறும்இருந்த உத்ஸாகம் குன்றாமல் மேன்மேலும்வெற்றியோ! தோல்வியோ! அதைக்கருதாமல் எழுதிக்கொண்டேவந்தால் அதன் பலனை அது கொடுக்காது போகாது. இந்த நம்பிக்கையை இழக்கவேண்டாமென்று சகோதரிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த போட்டிக்கு கற்பனை என்கிற விஷயம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

வை. மு. கோ

## 26

ஆனந்த மிகுதியால் அகமகிழ்ந்து தன்னையே மறந்து படுத்துக்கிடக்கும் அமராபாய் சற்று நேரத்திற்கெல்லாம் சடக்கென்று எழுந்து உட்கார்ந்தாள். எதையோ நினைத்தவள்போல் அவ்வறைக்கு வெளியே வந்து நின்றாள். பாலில் கலந்த மருந்தைக் கையில் ஏந்திக்கொண்டு ஒரு நர்ஸ் ஒய்யாரமாக வந்து அவளிடம் கொடுத்தாள்.

அதை வாங்கிப் பருகியபடியே "நர்ஸ்! பொழுதே போகவில்லை. ஏதாவது ஒரு புத்தகமோ பத்திரிகையோ கொடுக்கிறாயா! படிக்கலாம்" என்று வார்த்தையை ஆரம்பித்தாள்.

நர்ஸ்:—ஆகா! என்னை நம்பி எதிர்பார்த்தால் உடனே கிடைத்துவிடும். இந்த காலை மருந்துகளை ஒரு ரவுண்டு எல்லோருக்கும் கொடுத்துவிட்டு நான் வருவதற்குள் பொழுதே போய்விடும். என்னைக் கேட்பதைவிட பிறரைக் கேட்டால் பலன் கிடைக்கும். அதோ மேட்ரன் வருகிறார். அவரிடம் ஏராளமான புத்தகங்களை டாக்டர் கோகுல்நாத் ப்ரஸண்டாகக் கொடுத்திருக்கிறார். அவரைக் கேட்டால் கிடைக்கும்" என்று கூறிக்கொண்டே போனாள்.

அடுத்தபடியாக நோயாளிகளுக்கு தலை பின்னும் தாதி வந்தாள். வழக்கப்படி தலையை வாரிப் பின்னும் போது அமராபாய் தானாக வார்த்தையை ஆரம்பித்து "ஏம்மா! இந்த ஆஸ்பத்திரியில் உள்ள டாக்டர்கள் நர்ஸ்கள் முதலியவர்கள்கூட சங்கீதம் பாடுவார்களா?" என்று ஒரு புதிர் விடுவதுபோல் விட்டாள்.

தாதி:—அனேகமாய் எல்லோருமே பாடுவார்கள். ஆனால் சிலருடைய பாட்டுக்கள்தான் வெகு அத்புதமாயிருக்கும்,

அமரா:—அப்படியா! யார் யாருடையது அத்தனை அருமையாயிருக்கும்.

தாதி:—லேடி டாக்டர் வஸுந்தராதேவி, பெரிய டாக்டர் ஆத்மநாதன், சர்ஜன் சேகர், கல்யாணராமன், கோகுல்நாத், ரவி, சுதர்சன், பகவத்ப்ரஸாத், ஸேதுராம், கோவர்தனதாஸ் முதலியவர்கள் கச்சேரி செய்யும் பாகவதர்களைப் போலவே பாடுவார்கள், ஏன் நேற்று இரவு டாக்டர் கோகுல்நாத்தும் ஸேதுராமனும் பாடினார்களே நீங்கள் கேட்கவில்லையா!

அம:—(வியப்புடன்)... நேற்று இரவா!...யார் பாடுகிறதென்று எப்படி தெரிகிறது. ரேடியோவைப் போல் பெயர் சொல்கிறார்களா மண்ணா! ஏதோ காதுக்கினிமையாயிருக்கிறது. மனதிற்குப் பேரானந்தமாயமைகிறது. மோகனராமா என்கிற மோகன கீர்த்தனம் பாடியது யாரு?

தாதி:—அவர்தான் கோகுல்நாத். கடைசியில் பாடிய ராகமாலிகை எப்படித்தான் அமைந்தது! நேற்று ஒரு பேஷண்டுக்கு பெரிய ஆபரேஷனாயிற்று. அவர்கூட ராகமாலிகையைக் கேட்டு நோயை மறந்து பத்து நிமிஷம் நிம்மதியாகத் தூங்கியதை நானே கண்ணாறப் பார்த்தேன்.

அம:—(உள்ளுக்குள் மகிழ்ந்தவாறு) ஆமாம்! வெகு அபூர்வமான அழகுடன்தான் இருந்தது...ஆமாம்! அவருடைய மனைவிக்குக்கூட பாட்டு வருமா!—என்று ஒரு திடீர் கேள்வியைப் போட்டாள்.

தாதி:—அதெல்லாம் எனக்கென்ன தெரியும்?

அம:—அவருக்கு மனைவி இருக்கிறாளா இல்லையா என்பதுகூடத் தெரியாதா!

தாதி:—ஆஸ்பத்திரியோடு கிடக்கும் எங்களுக்கு எப்படியம்மா தெரியும்? எப்போதாவது ஒரு சமயம் அவருடன்கூட ஒரு வெள்ளைக்கார கட்டழகி வருகிறாள். அவள் தான் அவர் மனைவி என்கிறார்கள் சிலர். அதுவும் எனக்குத் தெரியாது.

அம:—என்ன! வெள்ளைக்காரியா! கலப்பு மணமா செய்து கொண்டிருக்கிறார் அவர்! அவரைப் பார்த்தால் அத்தகைய மனுஷ்ய ராகத் தோன்றவில்லையே!

தாதி:—ஆமாம்! மனிதர்களைப் பார்த்தால் என்ன சொல்ல முடியும்! அயோக்யன், சுத்த சோதா! என்று நினைக்கும் மனிதன் உண்மையிலேயே மகா பரிசுத்தவானாயும் பார்த்துக் கற்றுக்கொள்ளக்கூடிய பல உயரிய அம்சங்கள் அவனுள் அடங்கிக் கிடக்கிறதையும் பார்க்கிறோம். "அடாடா! இவனைப்போல் உத்தமன் உண்டா" என்று நினைக்கும் வேஷதாரிகளின் உள்ளுக்குள் குவிந்து கிடக்கும் ஊழல்களைக் கூறத்திறமில்லை. உலகம் பலவிதம்' என்று கூறிக்கொண்டு அடுத்த நோயாளிக்கு தலைபின்ன போனாள்.

"இந்த வேதாந்த வார்த்தைகளின் பேரொலிதான் உலகத்தில் எந்த மூலை முடுக்குகளிலும் தாண்டவமாடுகின்றது. இதன்படி நடப்பவர்களைத்தான் காணவில்லை." என்று எண்ணியபடி அமராபாய் குளிக்கச் சென்றாள்.

சொல்லத்திறமற்ற ஒரு நூதன உணர்ச்சி உடலில் புகுந்துகொண்ட பிறகு அவளது நடையுடை பாவனைகள் முற்றும் வேறுபட்டே இருப்பதை அவள் உள்ளமே அறிந்து வியப்புற்றது.

உள்ளுக்குள் புதைந்துகிடக்கும் ஏதோ ஒரு ரகஸியத்தைத் தன்னாலேயே அறியக்கூடாத மர்மத்தை எத்தனை நாளைக்குத்தான் புதைத்து வைத்துக் காக்கமுடியும்! அகத்தினழகு முகத்தில் என்றதும், அடுத்தது காட்டும் பளிங்குபோல் கடுத்தது காட்டும் முகம் என்றதுமான பழமொழிகள் பொய்யாகி விடுமா! அமராபாயின் மனமே வியக்கும்படி கோகுல்நாத்தின் தரிசனத்திற்குஉள்ளம் துடியாய்த்துடிப்பதும் அவனது அமுத மொழியைச் செவிகளால் பருகப் பதைபதைப்பதும் அவனைப் பார்க்கும்போதே தடுக்க வியலாத ஒரு வேட்கை உண்டாகி உள்ளத்தில் பெரும்புயலைக் கிளப்பிவிடுவதுமாக ஆய்விட்ட விநோதங்களை கோகுல்நாத்மட்டும் அறியாமலிருக்க முடியுமா!

மேற்கொண்டு எவ்வித மான விசேஷங்களுமின்றி பின்னும் சில தினங்கள் இதே மனோவிகாரங்களுடனும் நீண்ட மவுனத்துடனும் கழிந்தன: கோகுல்நாதனுடைய சரிதையை அறிய வெகு வெகு ப்ரயாசைப்பட்டுப்பார்த்தும்அதற்கான வசதியே உண்டாகவில்லை. அவன் கலியாணமானவனா! ஆகாதவனா என்பதை எத்தகைய சூக்ஷ்மத்தாலும் அறியக் கூடாது ஒரு பெரும் மூடுமந்திர வியப்பாகவே இருந்தது. அவனும் அனாவச்யமாய் அவளிடம் வீண் பேச்சு ஒரு வினாடிகூடப் பேசியது கிடையாது.

வலுவில் எப்படி அவனிடம் தானாகப் பேசுவது என்கிற வெட்கத்தால் அமராபாயும் சற்று மவுனமே சாதித்தாள். உடம்பு நாளுக்கு நாள் குணமடைந்து நன்றாகத் தேறி வருவதால் "இன்னும் ஒரு மாதம் இருந்து மருந்து சாப்பிட்டால் போதும், நீ ஊருக்குப் போகலாம்" என்று ஆத்மநாதன் சொல்லிவிட்டான். அதைக் கேட்ட பிறகுதான் அமராபாயின் மனோவேகமும் ஆவ

லும் அதிகரித்துப் போராடத் தொடங்கின.

வேறு எத்தகையவிஷயமாயினும் பெற்றோரிடம் தெரிவித்துவிடலாம். அந்த ரகஸியத்தை,அந்தரங்க ஆட்சியின் மர்மமான மூடு மந்திரத்தை யாரிடந்தான் தெரிவிக்க முடியும்? "இதற்கோர் முடிவில்லாமலேயேவீட்டிற்குப் போகும்படியாகிவிடுமோ!" என்ற பலமான யோசனைகள் வந்துவிட்டதால் இதுகாறுமிருந்த சந்தோஷமும் முகத்தில் குறுநகையும் மறைந்து லேசாக ஏக்கம், கவலை, வெட்கம் முதலிய உணர்ச்சிகளின் சாயை படர்ந்து காணப்பட்டது.

அந்திவானத்தின் வர்ண விநோதங்களின் அழகைக் கண்டு ஆனந்தித்தவாறும் அந்தி நேரத்திற்கு ஏற்ற வாசஸ்பதி ராகத்தை ஆஸ்பத்திரியில் அபூர்வமாய்ப் பாடும் இனிய கானத்தைக் கேட்டு இன்புற்றவாறும் வீற்றிருக்கையில் கோகுல்நாத் அங்கு வழக்கம்போல் வந்தான்.

அமரா மெய்மறந்து ஸோபாவில் சாய்ந்திருப்பதைக் கண்டு சில விநாடிகள் மவுனமாக நின்று பார்த்தான். "ஓகோ! பலமான யோசனை போலிருக்கிறது.'வீட்டிற்குப்போனதும் என்னென்ன செய்யலாம்? எப்படி வாழ்க்கைப் படகை இன்பக் கடலில் விடலாம்?" என்கிற பலத்த யோசனைபோலும்...அல்லதுவாசஸ்பதிக்குப்பதிலாக கமகக்ரியாவாவது ராமப்ரியாவாவது பாடினால் நன்றாயிருக்குமென்று எண்ணுகிறீர்களா?

என்று மெல்ல கேட்டபிறகுதான் அமரா கண்ணைத் திறந்து பார்த்து, இன்னதென்று கூறமுடியாத லஜ்ஜையும் பலவிதமான உணர்ச்சிகளும் தாக்கி அவளை ஒரு கலக்கு கலக்கியது. ப்ரமிப்புடன் எழுந்து நின்றாள். அமராபாயின் கண்களுக்கு அங்கு கோகுல்நாத் வெறும் மனிதனைக் தோன்றாமல் மன்மதன் வசந்தன்... என்றெல்லாம் ஏதேதோ சொல்கிறார்களே! அந்த தேவ பிம்பந்தான் தன் முன்பு நிற்பதாகத் தோன்றி சில விநாடிகள் அமுதக் கடலில் மூழ்கியவள்போல் இருந்தாள். பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டு...'' ஆம்... நீங்கள் கண்டு பிடித்த இரண்டும் உண்மையே!

இந்த வேளைக்கு ஷண்முகப்ரியா, நாட்டைக்குறஞ்சி முதலியன பாடினால் இன்னும் நன்றாக இருக்கும். இல்லையா!... இப்படி உட்காருங்கள்! என்று சோபாவைக் காட்டினாள்.

கோத :— இருக்கட்டும் பரவாயில்லை. உட்காரநேரமில்லை. பெரிய டாக்டர் உங்களை அழைத்துவரச் சொன்னார். அதற்காக வந்தேன்— என்றான். இதைக்கேட்டதும் அமராபாய்க்கு வெகு ஆச்சரியமாயிருந்தது. "என்னைக் கூப்பிடுகிறாரா! உண்மையாகவா! எதற்கு?"

கோத:—எதற்காக வென்பது அங்கு வந்தால் தெரிகிறது.

அம :—புதிர்போன்ற வார்த்தையில் விளையாட்டா! விஷயம் தெரியாமலா இருக்கும்? எதற்கு என்று சொல்லுங்கள்...

கோதல் .— அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீங்கள் வரும்போது நிரம்பவும் ஷோக்காக அப்பிடீ! ஜில்லென்று அலங்காரம் செய்து கொண்டுவரச் சொன்னார்... என்று கூறியவாறு ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான்.

அமராபாயிக்கு இன்னதென்று விஷயம் விளங்காததால் குழப்பமும் ஒரு மாதிரியான சந்தேகமும் உண்டாகிவிட்டன, உடம்பு நன்றாக குணமாகியவர்களை அவர் பாடச் சொல்லிக் கேட்கும் வழக்கம் அவளுக்குத் தெரியுமாதலால் அதற்கா

கத்தான் இந்த மூடுமந்திரம்போலி ருக்கிறது. சரிதான்; நான் இப்போதுள்ள மனநிலைமையில் பாடுவதாவது ஆடுவதாவது...பாடுவதும் அழுவதும் ஒன்றாகத்தானிருக்கும். போகாமலேயே இருந்துவிட்டால் என்ன!'' என்று எண்ணி பேசாமல் சோபாவில் படுத்தாள்,

அடுத்தக்ஷணமே அவளுடைய மனச்சாட்சியே அவளைக் குத்திக் காட்டி ''சீச்சீ! அத்தனை பெரிய மனிதர் சொல்லியனுப்பியதைத் தட்டுகிறாயே! இது தர்மமா! அவரால் தானே நீ இத்தனை விரைவில் உயிர் பிழைத்து பரிபூர்ண ஆரோக்யத்துடன் எழுந்தாய்! அதையும் மறந்து நன்றிகெட்டவளாய் இருப்பதுதான் அழகா? நீ படித்த படிப்பும் இது காறும் ஒழுகிவந்த நல்ல உத்தமமான பழக்கவழக்கமும் இச்சமயம் உனக்கு புத்தி புகட்டவில்லையா?'' என்று இடித்துக் காட்டுகிறது.

சிலவினாடிகள் தர்மசங்கடத்தில் தவிக்கையில் "பெரிய டாக்டர் உடனே அழைத்து வரும்படியாக உத்தரவு" என்று கூறிக்கொண்டு ஒரு நர்ஸ் அங்கு வந்தாள். அதற்கு மேல் அமராபாய் கண்ணாடியில் முகத்தைப் பார்த்துத் தலையைக் கோதிக்கொண்டு, தான் இருந்த கோலத்துடன் கிளம்பி "திடீரென்று பாடச்சொன்னால் எதைப் பாடுகிறது?'' என்ற யோசனையுடன் நர்ஸின் பின்னால் சென்றாள். த்யாகய்யரவாள் கீர்த்தனை பாடுவதா... தீக்ஷிதர்க்ருதி பாடுவதா!... ஏன்! தமிழ் பாட்டுக்கள் பாடினால் என்ன அதிலும் ப்ரபந்தம் பாடினால்...ஆம் ... இப்போது மார்கழி மாதந்தானே! அந்த கோதை நாச்சியார் அருளிச் செய்த திருப்பாவையில் சில பாசுரங்கள் பொருக்காக இராகமாலிகையாக இசைத்துப் பாடிவிட்டால் மிகவும் பொருத்தமாகிவிடும்.'' என்று பாசுரங்களை மனதிற்குள் உருப்போட்டவாறு நடந்தாள். அவள் நடப்பது காற்றிலசையும் பூங்கொடிபோலும் மாந்தளிர் போலும் இருக்கும் அழகை மாடி வராண்டாவில் நின்றபடியே கோகுல்நாத் பார்த்துப் பூரிக்கும் ரகஸியத்தை அவள் எப்படி அறிய முடியும்? அவள் மனம் பாசுரத்தில் லயித்திருந்தது.

## 27

ஆயர்பாடியில் ஆச்சியரையும் கோபாலர்களையும், பசு பக்ஷிஜாதி முதல் சகல உயிர்களையும் கானமாரியில் பரவசமுறச் செய்த குழலோசையின் அபரிமிதமான வசீகர சக்திக்கு நிகராகவே அந்தகனின் கானம்ருதம் அகிலாவின் இதய பாதாளத்தில் சோர்ந்து கிடக்கும் ஜீவதந்தியைத் தட்டி மீட்டி இன்பநாதத்தை எதிரொலிக்கச் செய்தது. அடுத்த வீட்டிற்கும் இவள் வீட்டிற்கும் மத்தியிலுள்ள ஜன்னல் அருகில் அசைவற்றப் பதுமைபோல் உணர்ச்சி அலைகளால் மோதப்பட்டு ஆனந்தத்துடன் நின்றாள். வந்துள்ளவனுக்கு சடுதியில் ஆகாரத்தைச்செய்து பரிமாறவோ, விசாரிக்கவோ முன்வராது உள்ளேயே புகுந்துகொண்டு கிடப்பதைக் கண்ட சாமிநாதனுக்கு கோபங்கூடவந்தது. உள்ளேவந்து எட்டிப்பார்த்தான். அகிலா அந்த அந்தகனின் இன்னிசையில் மெய் மறந்துபோய் "ஹா! என்ன அற்புத கானம் அந்தகன் கீதம்! என்று இசைத்தட்டில் வரும் என்று எதிர் பார்த்து ஏங்கி இருந்த என் உள்ளத்தைக் களிப்பிக்கச் செய்வதற்காகக் கடவுள் அந்த ஆவலைப் பூர்த்தி செய்துவிட்டார். என்ன ஆனந்தம்! என்ன கவர்ச்சி!

ஆஹாஹா! இது இசைத்தட்டு என்றே சொல்லமுடியாமல்நேருக்கு நேராகப் பாடுவது போலல்லவா இருக்கிறது. உம். பாவம். அவன் யாருடைய ஆதரவில் இருக்கிருனே! அமராபாய் எங்கிருக்கிருளோ? என் னுடைய நிலைமைக்கு மனங்கலங்கிச் சதா கண்ணீர் வடித்த ஆப்த சினே கிதை எனது விடிவு காலத்தைக் கண்டால் எத்தனை சந்தோஷப்படு வாள்!'' என்று நினைத்துத் தன் போக்காக நிற்கையில் அதிகாரமும் கோபமும் கலந்த குரலில் சாமி நாதன் "அகிலா!...இ தெ ன் ன செய்கை! அந்தகாரமும் அவலக்ஷ ணமும் குடிகொண்டு பாழடைந்த வனம்போலிருந்த உன் வாழ்க்கை யில் திடீரென்று பகவான் விலக்ஷ ணத்தை உண்டாக்கி ப்ரகாசிக்கச் செய்திருக்கும்போது நீ அந்த சந் தோஷத்தை மறந்து குருடனின் இசைத்தட்டு கீதத்தில் மூழ்கிக் கிடப் பது சரியில்லை. தான் செய்துவிட்ட தவறுதலை ஒருவன் உணர்ந்து வருந்தி மன்னிப்புக் கோரும்போது நீ பழைய க்ரூரத்தை வைத்துக் கொண்டு அலக்ஷியம்செய்வது தரும மில்லை. அப்பேர்ப்பட்ட துஷ்யந்த னும் சகுந்தலையும் பிரிந்து கூட வில்லையா!''

என்று கூறும்போது அகிலா வின் கணவன் அங்குவந்து "சாமி நாதா! வீணுக மனத்தைப் புண்படுத் தாதே. திடீரென்று உண்டாகிய சந்தோஷத்தில் வாயடைத்து மவுன மும் திணறலும் உண்டாவது சக ஜந்தானே! அதோடு நான் அவளுக் குச் செய்துள்ள கொடுமை சாதா ரணமாக மன்னிக்கக் கூடியதா? ஆயிரம் அம்புகள்போன்றும், ஈட்டிகள்போன்றும் அவள் இதயத் தில் பாய்ந்து குத்தி ஆருத ரண மாக்கியிருக்கும் புண் சடுதியில் ஆறி விடுமா! சற்று பொறு. நாம் போய் காவேரியில் குளித்துவருவோம். அவளுக்குத் தனிமையும் மன விச் ராந்தியும் இப்போது அத்யாவசிய மானவை. ஆகையால் நீ வா'' என்று அவனை அழைத்துக் கொண்டுபோனுன்.

"நான் செய்வது மிகவும் தப்பித மானது. இத்தனை யுகங்கள் கழித்த பிறகாவது மனது திருந்திவந்துள்ள மனிதனை நாமும் சோதித்தால் மனது பேதித்தாலும் பேதித்து விடலாம். பட்ட துன்பமெல்லாம் போதும்! இனிமேல் விஷத்தை விலை கொடுத்து வாங்கவேண்டாம்.'' என்று மனத்தை திடப்படுத்திக் கொண்டு சுறுசுறுப்பாய் சமையல் செய்யப் புகுந்தாள்.

காவேரிக்குச் சென்ற ஸாமிநாத னுக்கு, மனது முற்றும் தன் வய மின்றி இரவு பரதநாட்டியத்தின் மீதே லயித்து உள்ளுக்குள் அதே சிந்தனை செய்தவாறு மேலுக்கு மருமகப்பிள்ளையுடன் பேசி உப சரிக்கிருன். தான் இருந்த வைராக் யமும் சிலமும் ஒரு நொடிப் பொழு தில் எப்படியோ மாயமாய்மறைந்து போய் திடீரென்று அன்னிய மாதி னிடம் மனது சபலித்து ஆட்டும் விசித்திரத்தை அவனுல் நம்பவே முடியவில்லை.

எத்தனையோ விதத்தில் வார்த்தை பராக்காகவிருப்பினும் எண்ணமும் அகக் கண்ணும் ரத்தினப்ரபாவின் மீதே சென்று காட்சி கண்டு களித் துத் தேன் குடித்த நரிபோல் குதூ கலிக்கின்றது. தான் ரத்தினப்ரபா வுக்கு பாடம் சொல்லிக்கொடுத்தால் என்ன?...என்னவாவது...கட்டாயம் சொல்லிக்கொடுத்தால்தான் மனநிம் மதி உண்டாகும்... ஆம்...இதைப் பிறர் அறிவானேன்!...ஆக்ஷேபனை சமாதானம் செய்வானேன்! என்

விஷ்டம்...என்னைக் கேட்பவர்கள் யாரிருக்கிறார்கள்?... இந்த சமயம் தானாக வந்துள்ள சாதனத்தைக் கைவிடக்கூடாது. மருமகப்பிள்ளையை அனுப்பி அகிலாவின் துயரத்தையும் தீர்த்து எனக்கும் புதிய சந்தோஷத்தையே அளிக்க பகவான் செயல்போலும்" என்ற யோசனையுடன் புனிதமான காவேரியில் உடல் அழுக்கைப் போக்க ஸ்நானம் செய்தவாறே உள்ளழுக்கைப் பூசிக்கொண்டு மகத்தான பாதகத்திற்கு வலை வீசிக்கொண்டிருந்தான்.

அவனது நீண்ட மவுனத்தையும் கலவரத்தையும் கண்ட மருமகப்பிள்ளை "என்ன ஸாமிநாதா! ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருக்கிறப்போல் தெரிகிறது. 'ஏதடா! இவன் மறுபடியும் தங்கையை விட்டு ஓடிவிடுவானோ!' என்று எண்ணுகிறாயா! அப்படிப்பட்ட எண்ணமிருந்தால் அதை இப்போதே விட்டுவிடப்பா! நான் என் உயிருள்ள மட்டும் இனி அம்மாதிரி செய்யமாட்டேன். சரி. அது கிடக்கட்டும்... இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் அந்த நண்பன் வந்துவிடுவான்! ரத்னப்ரபாவுக்கு நீ சொல்லிக்கொடுப்பதால் ஒரு விளக்கைக் கொண்டு ஓராயிரம் விளக்குகள் ஏற்றுவதுபோன்ற ப்ரகாசத்தை உண்டுபண்ண புண்ணியமுண்டு. நீ கட்டாயம் ஒப்புக்கொள்ளு. மாதம் 50 ரூபாய் சம்பளம் கொடுப்பதோடு அவ்வப்போது தகுந்த சன்மானங்கள் வேறு கிடைக்குமாகையால் உடனே ஒப்புக்கொண்டுவிடு." என்றான்.

இவ் விஷயத்தைப் பற்றியே நினைத்துக்கொண்டிருக்கும் சாமிநாதன் இரட்டைத் தேங்காயை உடைத்துக் கையில் கொடுத்தது போன்ற பரமானந்தமும், எதிர்பார்த்த விஷயம் இத்தனை சடுதியில் முடிந்துவிட்டதை எண்ணிப் பூரிப்புமடைந்து ஏதோ வெகு நேரம் யோசித்துப் பதில் சொல்வதுபோல் ஒருவாறு சம்மதிப்பதாக வேஷம் போட்டு உள்ளுக்குள் போராடும் வேகத்தை மறைத்துக்கொண்டு "சரி... ஏதோ உனக்காக ஒப்புக்கொள்ளுகிறேன். பெண்களுக்குப் பாடம் சொல்வதென்பதே எனக்குப் பிடிக்காது. வயிற்றுப் பிழைப்புக்கு மட்டுமில்லை, காணாது கண்டெடுத்த மாணிக்கம் போன்ற மருமகப் பிள்ளையாகிய உன் மனதிற்கு சந்தோஷமாயிருப்பதற்காக ஒப்புக்கொள்கிறேன். அந்த மனிதன் எப்போது வருவான்" என்று தான் மிக யோக்யன்போல் நடித்துக் கேட்டான்.

கோபாலன்:—மிக்க சந்தோஷம் அவன் இப்போதே வந்துவிடுவான். நீ இந்த ஊரிலேயே இருப்பதாயின் அவளுடைய காரை அனுப்பி உன்னை அழைத்துக்கொண்டுபோய்க்கொண்டு விட ஏற்பாடு செய்வதாகச் சொல்கிறாள். அதோடு நீ அந்த ஊருக்கே வந்துவிடுவதாயின் அவளுக்குள்ள ஏராளமான வீடுகளில் ஒன்றைக் கொடுத்து சகல சவுகரியங்களையும் செய்து கொடுப்பதாகவும் சொல்கிறாள். உன் பாடு இனி கொண்டாட்டந்தான். மனைவியை அழைத்து வந்துவிடு. நானும் அகிலாவை அழைத்துக்கொண்டு போய்விடுகிறேன். மிலிடெரீ ஆபீஸில் ஏதோ கிடைக்கும். காலந்தள்ளலாம் என்று தீர்மானம்.

இனிமேல் மிலிடெரி சிப்பாயாகப் போகும் எண்ணத்தை விட்டுவிட்டேன். நேற்று உன்னைப் பார்க்கும் வரையில் அந்த எண்ணம் என் மனத்தில் உறுதியாகப் படிந்திருந்

தது. இனிமேல் அவ்வெண்ணத்திற்கு இடமில்லை. அடாடா! என்ன ஆச்சரியம்! அதோ விச்சு வந்துவிட்டானே! உன்பாடு யோகந்தான்... விச்சூ......விச்சூ...இதோ இருக்கிறோம் வா" என்று கூப்பிட்டான்.

"ஓ! இன்னும் ஸ்நானம்கூட ஆகவில்லையா! பிரிந்தவர் கூடினுல் பேசவும் கூடுமோ! என்கிறபடி இருவரும் பார்த்து மகிழ்வதிலேயே இத்தனை நேரமாகிவிட்டதா! சரி...விஷயம் என்னவாயிற்று...என்ன சார்! என்ன சொல்கிறீர்கள்? என்று ரத்தினப்ரபா கேட்டுவரச் சொன்னுள். காரியம் ஜெயமாகவிருந்தால் உடனே அழைத்துவரும்படி என்னையே காரில் அனுப்பியிருக்கிருள்."

என்று முடிப்பதற்குள் "இப்பதான் ஒருவாறு சம்மதித்து ஒப்புக்கொண்டார். நாங்கள் வீட்டிற்குப் போய் சாப்பிட்டதும் உன்னுடன் அழைத்துப் போகலாம்" என்ருன். பிறகு ஸ்நானம்செய்து முடிந்ததும் உடைகளை உலர்த்தி உடுத்திக்கொண்டு அங்குள்ள சிறிய கோயிலுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்துப் பின் வீட்டிற்குச் சென்ருர்கள்.

அகிலாபாய் தனது ஒத்தைக்கரத்தினுல் ஏதோ எந்திரம்போல் சமையல் செய்து முடித்தாள். இன்னதென்று கூறத்திறமற்ற மன எழுச்சியும் ஒருவிதமான படபடப்பும் திக்கு திக்கென்ற திகிலும் ஒன்று கூடி அவளை என்னமோ செய்கின்றன. இதுவரையில் ஓர் சன்யாசினியைப்போல் காலந்தள்ளிவந்த வாழ்வையும்இப்போது திடீரென்று வாழ்க்கைப் படகு செல்லும் மார்க்கமே சடக்கென்று திரும்பிப்போவதையும்எண்ணிஎண்ணி வியந்தாள்.

"எப்படித்தான் அந்த மனிதனுடன் தனித்துப் பேசுவது?" என்று நினைக்கும்போது தடுக்கமுடியாத் கூச்சமும் அச்சமும் அவளை பாதித்தன. அதைப்பற்றியே யோசித்துக்கொண்டிருக்கையில் மேலே சொன்ன மூவரும் வந்தார்கள். தலை குனிந்தவாறே அகிலா மூவருக்கும் பரிமாறினுள். அப்போதுதான் அவளது கையின் ஊனத்தைப் பார்த்த அவள் கணவன் திடுக்கிட்டவாறு "இதென்ன அகிலா! கை விரல்கள் ஏனிப்படி இருக்கின்றன?" என்று அலறியவாறு கேட்டான்.

அகிலா பதிலே சொல்லவில்லை. ஆடு திருடிய கள்ளன்போல் சாமிநாதன் விழிக்கிருன். நான்தான் ஆத்திரத்தில் உடைத்துவிட்டேன் என்று எங்கே சொல்லிவிடுவாளோ என்ற பயம் நடுங்குகிறது. அந்த ஒரு க்ஷணம்மட்டும், தான் எத்தனை பெரிய குற்றத்தை, மறக்கமுடியாத பாதகத்தைச் செய்துவிட்டோம். என்கிற ஒரு சாட்டையடி மனத்தில் சுறீரென்று விழுந்தது. முகத்தில் அசடுதட்ட விழிப்பதை அகிலா உள்ளிருந்தவாறு கவனித்து விட்டாள்.

அவனது தவிப்பையும் குழப்பத்தையும் அறிந்த அகிலா உள்ளிருந்தபடியே, "காவேரியிலிருந்து ஜலங்கொண்டுவரும்போது மாடுமுட்டித் தள்ளிவிட்டது. அந்த விபத்தினுல் விரல்கள் இப்படியாகிவிட்டன." என்று நடுங்கும் குரலுடன் கூறினுள். இதைக்கேட்ட சாமிநாதனின் உள்ளத்தில் அவனை யறியாத ஒரு தாக்குதலும் செம்மட்டியால் அடிப்பதுபோன்ற ஒரு அதிர்ச்சியும் உண்டாயின. முகத்தில் அசடுதட்ட விழித்தான். "ஆம்! ஆம்! பெரிய விபத்து வந்து பகவான் க்ருபையால் ஒருவாறு குணமாயிற்று" என்று தாளம் போட்டான்.

சாப்பாடு முடிந்ததும் இருவரும் வெளியே வந்தார்கள். "சரி! நான்



அவருடன் போய்வருகிறேன். உன் சொத்தை உன்னிடம் ஒப்புவித்து விட்டேன்; என் கவலையும் பளுவும் தீர்ந்தன. ஜாக்ரதை''...என்றுகூறிய வாறு உள்ளேவந்து ''அகிலா! நான் சற்று வெளியேபோய் வரவேண்டும். பகவான் க்ருபையில் உன் வாழ்வு புதிய பாதையை நோக்கிப் புறப்பட்டிருக்கிறது. அவரோடு சந்தோஷமாயிரு. நான்போய் உதயத்தில்வந்துவிடுகிறேன்.'' என்றுகூறிய வாறு பதிலுக்கே எதிர்பார்க்காமல் தடதடவென்று போய்விட்டான்.

அகிலாவுக்கு என்ன காரணத்தினாலோ திக்கென்று தூக்கிவாரிப் போட்டது. தேகமும் அவளையறியாது கிடுகிடென்று ஆடியது. சாப்பாடும் பிடிக்கவில்லை. இதற்குள் கோபாலன் உள்ளேவந்து ''அகிலா! நான் உனக்குப் பரிமாறுகிறேன்

சாப்பிடு!" என்று கூறியவாறு இலையைப் போட்டான். கூச்சத்தினுல் அகிலாவின் தொண்டை அடைத்தது. "வேண்டாம்! எனக்கு வயிறு நிரம்பியிருக்கிறது. பசியே இல்லை" என்று வேலையைக் கவனித்தாள். கோபாலன் வீதிக்கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே வந்து கட்டில்மீது உட்கார்ந்தான். அகிலாவுக்கு ஒன்றுமே தோன்ருது சற்று தவித்தாள். இதற்குள் "அகிலா! அகிலா!" என்று இரண்டு மூன்று முறை கூப்பிட்டதால் கையில்வெத்திலைத்தட்டுடன் உள்ளே சென்ருள். அவளை யறியாமலேயே சரீரம் கிடுகிடென்று ஆடியது.

## 28

திருப்பாவையில் மனம் லயித்தவாறு நடக்கும் அமராபாயைப் பார்த்ததும் ஆத்மநாதன் "ஓ! வாம்மா! ஏன் இத்தனை நாழிகை? உள்ளே வாம்மா!" என்று அன்பாக அழைத்துச் சென்ருர். அமராபாய் வியப்பே வடிவமாக உள்ளே சென்றதும் அங்கு ஆண்களும் பெண்களுமாக நாலைந்து பேர்கள் உட்கார்ந்திருப்பதைக் கண்டு சற்று அச்சத்துடன் நின்ருள்.

ஆத்மநாதன் அவளை நோக்கி "அமராபாய்! என்ன சங்கோஜப்படுகிருயம்மா? இவர்கள் யாரோ என்று, என்னவோ என்று பயப்படாதே! இதோ உன் தகப்பனுரே கடிதம் எழுதியிருக்கிருர். இவர்களை நீ அதிகம் பார்த்திருக்க முடியாது. உன் தகப்பனுரின் கடிதத்திலிருந்து தெரிந்துகொள்ளு. இந்தா!" என்று கடிதத்தைக் கொடுத்தார். வியப்பும் திகைப்பும் அடைந்த அமரா கடிதத்தை வாங்கிக்கொண்டு அடுத்த அறைக்குள் போனுள்.

"அன்பே உருவாயமைந்தடாக்டர்! சர்வ மங்களமும் உண்டாவதாக.

உங்களுடைய கடிதம் கண்டு பரம சந்தோஷமடைந்தேன். நான் நினைத்தபடி கெடுதலான இருமல் நோயல்ல, இது சாதாரணமான ஒருவகை இருமல் நோய்தான் என்றும் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யலாம் என்றும் தாங்கள் எழுதியிருந்ததைப் பார்த்ததும் நான் பரமானந்த மடைந்தேன். சகலமும் உங்கள் தயவுதான் என்பதை என்றும் மறக்கவே மாட்டோம்.

என் ஆப்த ஸ்னேகிதரான ஸ்ரீமான் பாலசுந்தரத்தின் மகன் ஸீதாராமனுக்கு அமராவையே கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று வெகு நாட்களாக அவா. அந்த ரகஸியத்தை என்னிடம் பல முறை சொல்லியிருக்கிருர், 'வேளை வரும்போது நடக்கட்டும் எனக்கும் சம்மதம்' என்று நான் சொல்லி வந்தேன். அவர்கள் வெகு தூரதேசத்தில் வேலையாயிருப்பதால் இப்போது மூன்றுமாதம் லீவில் வந்திருக்கிருர்கள்.

அவர்களுடைய மகன் ஏழுவருஷமாக சீமையில் படித்துப் பெரிய உத்யோகத்துடன் இப்போதுதான் தாய் நாட்டிற்கு வந்து ஒரு மாதமாகிறது. அவர்கள் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்வதற்காக எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிருர்கள். எனக்கு வேலை ஓய்வில்லாததால் அவர்களைமட்டும் அனுப்பியிருக்கிறேன். அமராவைப் பார்க்கவேண்டுமாம். தாங்கள் உத்திரவு கொடுத்தால் இக்காரியத்தைச் செய்யத் துணிந்தேன். அமராபாய் பெரிய படிப்புப் படித்த பெண்ணுயினும் இக்காலத்திய பெண்களைப்போல் அதிகப்ரஸங்கித்தனமோ, பெரியவர்களுக்கு எதிராகவும் விரோதமாகவும் நடக்கும் துடுக்குக் குணமோ காதல் கீதல் முதலியனவோ லவ

லேசமுமில்லாத உத்தமப் பெண் என்பதை நீங்களும் அறிந்திருக்க லாம். நானும் அதைத் தெரிந்துகொண்டிருப்பதால்தான் தைரியமாக அனுப்புகிறேன். அமராவிடம் இக்கடிதத்தைக் கொடுத்தாலும் சரி அல்லது விஷயத்தைச் சொன்னாலும் சரி. எனக்குச் சம்மதம்.

என் மனைவி ஒரே பிடிவாதமாய் இந்த வருஷமே விவாகத்தைமுடித்து விட வேண்டுமென்றும் தனக்கு உடல் நலம் சரியாயில்லாததால் இனி விவாகத்தைச் செய்யாமல் தாமதிக்கக் கூடாதென்றும் வற்புறுத்துகிறாள். அதுவும் வாஸ்தவம், அதோடு இக்காலத்தில் சிலர் அனுவச்யமாக விவாகத்தைச் செய்யாமல் வைத்திருப்பதும் சில இடங்களில் அதனால் பெரும் விபரீதங்கள் நிகழ்ந்துவிடுவதும் தினம் காதில் கேட்கும்போது எனக்கே பயமாயிருக்கிறது.

பையன் மிக்க அழகாயிருப்பதோடு உயர்ந்த படிப்பும் உத்யோகமும் நல்ல குணமும் அமைந்திருப்பதால் நாங்கள் எல்லோரும் ஏக மனதாக நிச்சயம் செய்துவிட்டோம். உங்களுக்கும் இது மிகவும்பொருத்தமாயும் பிடித்தமாயும் இருக்குமென்று நம்புகிறேன். அமராபாயும் பரிபூர்ண த்ருப்தியுடன் ஒப்புக்கொள்வாள் என்பது என்நம்பிக்கை ஆகையால் அவர்களுடன் பேசி விஷயத்தையறிந்து எனக்குஉடனே எழுதவும். ச்ரமம் கொடுப்பதற்கு மன்னிக்கவும். அமராவுக்கு எனது ஆசீர்வாதம்.''

என்கிற கடிதத்தைப் படிக்கும்போதே அமராபாயின் இதயத்தில் செம்மட்டியாலடிப்பது போலும் மூளையே குழம்பிவிடுவதுபோலும் பெரிய அதிர்ச்சி உண்டாகியது. 5 வினாடியில் படித்துமுடிக்கக்கூடிய கடிதத்தை 5 நிமிஷங்களாகியும் படிக்க முடியாதுபோயிற்று. மனத்திற்குள் செய்யும் வேதனையின் போராட்டத்தில் அவள் இடத்தையும் வந்துள்ள மனிதர்களையுங்கூட மறந்தாளென்றால் மிகையாகாது. ''என்ன? கல்யாணமாம். பார்க்க வந்திருக்கிறார்களாம். இதெல்லாம் என்ன சோதனை? ஐயயோ! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது என்பார்கள். கிணறு வெட்டாதமுன்பே பூதம் பிசாசு முதலியன எல்லாம் கிளம்பி என்வாழ்க்கைப் பாதையை முள்வேலியிட்டுப் பாழாக்கிவிடும் போலிருக்கிறதே என்ன செய்வேன்?

பாவம்! எனது அந்தரங்கமும் திருட்டு எண்ணத்தின் ரகஸியமும் அவர் எப்படி அறியக்கூடும்? அதனால்தான் என்னை உத்தமப் பெண் என்றும் தற்காலத்திய சில பெண்களைப்போல் காதல் ஊதல் முதலியன லவலேசமும் இல்லை என்றும் கம்பீரமாக எழுதியிருக்கிறார், இந்த நிலைமையில் நான் எனது ரகஸியத்தைச் சொல்லாமல் மூடிவைப்பதா? அன்றி தகப்பனாரிடம் உண்மையைக் கூறிவிடுவதா?'' என்று மகத்தான குழப்பமும் கவலையும் உண்டாகிவிட்டன.

சில நிமிஷங்கள் ஆகியும் எழுந்து வராததால் ஆத்மநாதன் மீண்டும் உள்ளே வந்து ''உம்.... இப்போது வெகு நன்றாகப்புரிந்திருக்குமென்று நினைக்கிறேன். பையன் பார்ப்பதற்கு பலே ஜோராக இருக்கிறான். மூக்குக் கண்ணாடியும் முகமும் பலே கம்பீரமாயிருக்கிறது. அதோடு இங்கிலாண்டு சென்று திரும்பிய ப்ரபு......உனக்கென்ன குறைவு? இனி எங்களையெல்லாம் மதிக்கக் கூடமாட்டாய்......அவர்கள் காத்திருக்கிறார்கள். சீக்கிரம்எழுந்துவா; அந்த வாலிபன் இந்த பக்கம் திரும்

மித் திரும்பிப் பார்த்து கழுத்தும் வலித்துவிடும்போலிருக்கிறது. பாவம்! வெகு ஆசைகொண்டிருக்கிருனைக்கும்'' என்று சற்று பரிகாஸக் குரலில்கூறி குறும்பாகப்பார்த்தார்.

இந்த வார்த்தைகள் ஒன்றுமே அமராவின்காதில் விழவில்லை. உள்ளுக்குள் பொங்கியெழும் பலவித மான உணர்ச்சிகளுடன் டாக்டரை ஏற இறங்க முறைத்துப் பார்த்தாள். ''டாக்டர்! சங்கிதத்தின் அபூர்வ மான வசிய சக்தியைப் பரம அவுஷதமாகக் கண்டுபிடித்துள்ள கெட்டிக்காரத்தனத்தைப்போல்நோயாளிகளுக்குக் கல்யாணம் செய்வதையும் ஒரு அவுஷதமாகக் கண்டுபிடித்திருக்கிறீர்களா! நோயாளி இன்னும் ஆஸ்பத்திரியை விட்டு வீட்டிற்குக்கூட போகவில்லை. இதற்குள் இம்மாதிரி செய்வது மீண்டும் நோயை விலைக்குவாங்குவதற்கு ஒப்பாகும் அல்லவா! வீட்டிற்கு அனுப்பும் நோயாளிகளை வெகு ஜாக்ரதையாக இருக்கும்படியாக உஷார்ப்படுத்தி அனுப்பும் முறை மாறி இப்படியா செய்வது? எனக்கு கொஞ்சங்கூட இஷ்டமே இல்லை டாக்டர்! வீணாக என்மீது கோபம் வேண்டாம். என் பிதாவுக்கு இது விஷயமாக நீங்கள் ஏன் கடிதம் எழுதவேண்டும்?'' என்று சற்று விருவிருப்பாகவே பேசிவிட்டாள்.

ஆத்மநாதன் உண்மையில் சற்று ப்ரமித்துத்தான் நின்ருர். வாஸ்தவம். பெண்ணின் விருப்பத்தை அறியாமலேயே தகப்பனுர் தடபுடல் செய்துவிட்டாரே. உள்மர்மம்யாருக்குத் தெரியும்?'' என்று ஒரு விநாடி யோசனைசெய்தார். அடுத்த நிமிஷம் ''அமரா! கோபிக்காதே. சில நோயாளிகளுக்கு நீ சொல்லியபடி சட்டங்கள் போடுவதுண்டு. சில நோயாளிகளுக்குக் கட்டாயமாய் கல்யாணம் செய்வதுமுண்டு என்கிற ரகஸியம் உனக்குத் தெரியுமா! அதேபோல் சில நோயாளிகளுக்கு விவாகத்தைச் செய்வதால் குற்றம் ஒன்றுமே இல்லை. ஆகையால் உன் தகப்பனுர் என்னைக் கேட்டதற்கு நான் வைத்தியமுறையில் பதில் சொன்னேன். மற்றபடி உங்கள் குடும்பத்தின் விஷயமோ, உன்னுடைய ரகஸியமோ யாருக்குத்தெரியும்? வந்தவர்களை ''பார்க்க முடியாதாம்;நீங்கள் எழுந்துபோகலாம்' என்று சொல்லியனுப்பிவிடட்டுமா! இதையே இப்போதே உன் தகப்பனுருக்கும் எழுதிவிடுகிறேன்!''

என்பதைக்கேட்டு அமராபாயின் மனது பின்னும் குழம்பியதோடு சிறிதுபயத்தையும் அடைந்தது.''இதுவரையில் ஒருபோதும் தகப்பனுரின் மனங்கோணும்படியாக நடக்காது நல்ல பெயரெடுத்துவிட்டு இப்போது இம்மாதிரி த்வேஷத்தை உண்டாக்கிக் கொள்வதா?'' என்று நினைக்க அழுகையாக வந்தது. தன் ரகஸியத்தை எப்படி யாரிடம் சொல்ல முடியும்?

இவள் தேம்பித்தேம்பி அழுவதைப் பார்த்த ஆத்மநாதன் சிரித்துக்கொண்டே ''அமராபாய்!கல்யாணப் பெண்ணைப் பார்க்க வந்திருப்பவர்களின் முன்பு இப்படி அபசகுனம் போல் அழுது முகத்தை விகாரப் படுத்திக்கொள்வதுவேடிக்கையிலும் வேடிக்கையாக இருக்கிறது. சரி! நான் போகிறேன்!'' என்று கூறியவாறு விடுவிடுவென்று வெளியே போய்விட்டார்,

ஒன்றுமே தோன்ருத அமராபாயிக்கு இது பெரும் சோதனையாயும் வேதனையாயும் இருந்ததால் மெல்ல சமாளித்துக்கொண்டு ''டாக்டர்! டாக்டர்! இங்கு வாருங்கள்'' என்று கூப்பிட்டாள்.

திரும்பிவந்த ஆத்மநாதன் "என்ன உத்திரவு?" என்றார். 'இதோ வருகிறேன்." என்று கூறி கண்களையும் முகத்தையும் துடைத்துக்கொண்டு அவன் பின்னால் வந்தாள். எத்தனை தரம் ப்ரயாஸைப்பட்டு முகத்தில் சிரிப்பை வரவழைத்துக்கொண்டும் அவளால் ஒன்றும் சமாளிக்கவே முடியாது போய்விட்டதால் ஏதோ ஒருவாறு சொப்பனத்தில் நடப்பவள்போல் வந்து உட்கார்ந்தாள்.

வந்தவர்களிடம் ஒன்றுமேபேசத் தெரியாமல் சற்று தியங்கி பவுனம் சாதித்தாள். அவர்களாகவே அமராவிடம் பேசத்தொடங்கி 'நாங்களெல்லாரும் உனக்குப் புதிது. உன் 'தகப்பனார்தான் எங்களுக்கு மிகவும் பரிச்சயம்...நீ இரண்டு வயதுக் குழந்தையாயிருக்கையில் பார்த்தது. பார்க்கலாமென்று வந்தோம். உடம்பு முற்றிலும் குணமாகியதைக் காண மெத்த சந்தோஷம்! அப்பா கடிதம் எழுதியிருப்பார்...

என்று கூறி முடிப்பதற்குள் அமரா "ஆமாம்! கடிதம் வந்தது" என்றுமட்டும் இழுத்தாற்போல்கூறி நிறுத்திக்கொண்டாள். 'சரி! உனக்கு அதிகம் ச்ரமங்கொடுக்கவில்லை. அடுத்த வாரம் ஒரு நாள் டாக்டர் உன்னை அனுப்புவதாகக் கூறியிருக்கிறார். அன்று வந்து அழைத்துப் போகிறோம். வருகிறாயா!... இதென்ன ஆச்சரியம்! இக்காலத்திய படித்த பெண்களைப்போன்ற தடபுடலோ அட்டகாஸமோ உனக்குத் தெரியவில்லையே!...எங்கள் பையன்கூட சீமைக்குப்போய் வந்திருக்கிறானேயன்றி நம்முடைய பழய வழக்கப்பழக்கங்கள்தான் அதிகம் பிடிக்கும்" என்றார்கள்.

எதற்குமே பதில் சொல்வதற்கு அமராபாயிக்குப் பிடிக்கவே இல்லை. வேண்டாவெறுப்பாக பதில் சொல்கிறாளேயன்றி மனத்திற்குள் செய்யும் சங்கடத்தின் புயலை யாரால் அறிய முடியும்? தன்னை மணப்பதற்காக வந்துள்ள மனிதனின் முகத்தைப் பார்க்கவும் சகிக்கவில்லை. அவனோ வலுவில் ஏதேதோ பேசிக்கொண்டு வருவதைப் பொறுக்கமுடியாது சற்று சமாளித்துப் பார்த்தாள்... 'டாக்டர்! எனக்கு திடீரென்று அதிகமாகத் தலைவலிக்கிறது. நான் போய் படுத்துக்கொள்கிறேன்... (வந்தவர்களைப் பார்த்து) ரொம்பவும் சந்தோஷம்; எனக்கு உட்கார முடியாது தலைவலிக்கிறது. நான் போய் படுத்துக்கொள்கிறேன். அடுத்த வாரம் கட்டாயம் வருகிறேன்.'

என்று தானாகவே கூறிவிட்டுப் பதிலை எதிர்பார்க்காமல் தடதடவென்று எழுந்துபோய் தன்னறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு தடார் என்று கட்டிலில் படுத்துவிட்டாள். அவளுக்கு வரும் துக்கத்தை அவளால் அடக்க முடியாது பீறிக்கொண்டு வந்ததால் விம்மி விம்மி அழுவதைத் தவிர வேறுஒன்றுமே அவளுக்குத் தோன்றாது புத்தியே மழுங்கிவிட்டது போலாகியது. இம்மாதிரி ஒன்று நடக்கும்; அதுவும் இந்த இடத்திலிருக்கும்போதே இம்மாதிரி நடக்குமென்று அவள் கனவுகூடக் காணவில்லையாகையால் அவளுக்கு இச்சம்பவம் மகத்தான அதிர்ச்சியைக் கொடுத்ததோடு தன் தகப்பனார்மீது கோபம் கோபமாக வந்தது.

இந்த தர்மசங்கடமான நிலைமை அவளுக்கோர் பேராபத்தாகவே தோன்றியதேயன்றி சாமானியமாகத் தோன்றவில்லை. இந்த பெரிய சோதனையிலிருந்து எப்படித் தப்புவது? மனத்தில் தோன்றியுள்ள தூய ஆசையை அடியோடு மறைத்தும் ஒளித்தும் என்னை நானே வஞ்

சித்தும் வெட்கத்தால் பாழாய்விடு வதா! அன்றி தைரியத்தை இழக்கா மல் தகப்பனரிடம் உண்மையைக் கூறி ஏதாவது விமோசனம்உண்டா என்று பார்க்கலாமா! என்கிற போராட்டங்கள் அவனை பலமாகத் தாக்கவாரம்பித்தன. அந்த வேதனை யில் உலகமே இருண்டுவிட்டது போல் தோன்றியது.

## 29

இதுவரையில் சாமிநாதன் காசைக்கொடுத்து பஸ்ஸில் போயி ருக்கிருனேயன்றி தனிமோட்டாரில் போனதே கிடையாது. அவனுடைய பிறவியிலேயே இதுதான் முதல் தடவை காரில் ஏறுவது. அதுவே அவனுக்கு கூறத்திறமற்ற சந்தோ ஷமும் வியப்பும் உண்டாக்கியது.

சரீரம் காரில் பறப்பதுபோல் மனமும் கட்டுக்கடங்காத வேகத் தில் பறக்கிறது. ரத்தினப்ரபாவின் தரிசனம் கிடைக்கப்போவதுபற் றிய பேரானந்தத்தோடு "ஒருவேளை அவள் என்னைவிட அதிகம் படித்தி ருப்பாளோ! அப்படி யிருக்குமா யின் என்னுடைய நினைவெல்லாம் வெறும் பகற் கனவாகிவிடுமே!" என்கிற எண்ணமும், பயமும் ஊடேதோன்றி வருத்தும்போது மோட்டாருடன் ஒருகுலுக்கு குலுக் குவது போலிருந்தது.

"நம்மைவிட மேலான வித்யாவ தியாகவிருந்தால் ஏன் ப்ரைவேட்டு சொல்லிக்கொள்ள ஆசைப்பட்டு என்னை அழைக்கவேண்டும்.? எதற் கும் நம் அதிருஷ்டம் எப்படியிருக் கிறதோ பார்க்கலாம்' என்று தனக் குத்தானே ஆக்ஷேபனையும் சமாதா னமும் செய்தவாறு ஒரு பொம்மை போல் உட்கார்ந்திருந்தான்.

ப்ரம்மாண்ட அரண்மனைக் கொப்பான பெரிய பங்களாவின் முன் கார் வந்துநின்றது. பஞ்சகச்ச வேஷ்டியும், குடுமி முடிச்சுமாக அசல் பட்டிக்காட்டான்போலுள்ள சாமி நாதனைப் பார்த்து கூடவந்தவன் உள்ளுக்குள் சிரித்துக்கொண்டு அதை ஜாடைமாடையாகச் சொல்ல வும் சொல்லிவிட்டான்.

சாமிநாதனின் மனத்துடிப்பு, வீட் டிற்குள் வந்ததும் பின்னும் பன் மடங்காகப் பெருகி வருத்துகிறது. இதயத்திற்குள் அழுந்திக் கிடக்கும் அழுக்குடன் பரமசாதுபோல் அந்த மனிதன் பின்னலேயே நடந்தான். ரத்னப்ரபாவின் அத்புத அலங்கார மும் தோற்றமும் இப்படியிருக்கும் அப்படி இருக்கும் என்று தன் மனக் கண்ணல் ஏதோ ஒருமாதிரி சித்தி ரித்துக்கொண்டுசென்ற சாமிநாதன் திடுக்கிடும்படி, ஒரு சிறந்த குலஸ்திரீ யைப்போல் வெகுவெகு சாதாரண அலங்காரத்துடன் பணிவும் அடக்க மும், வித்யாவதி என்கிற கர்வமில் லாது, மிகவும் சாந்தத்தின் காந்தம் முகத்தில் ஜ்வலிக்க சாதாரணமான ஒரு பாயின்மீதுட்கார்ந்து வால்மீகி ராமாயணத்தைப் படித்துக்கொண் டிருக்கும் ஆச்சரியத்தைக் கண்டு அவனல் நம்பவே முடியவில்லை.

இவனை அழைத்துவந்த விச்சு அவளிடம் மரியாதையாகச்சென்று "அம்மணீ! இதோ ஸம்ஸ்கிருதபண் டிதரை அழைத்துக்கொண்டுவந் தேன். பாடம் சொல்லிக்கொடுக்க இசைந்து வந்திருக்கிருர்" என்று அறிமுகப்படுத்தினன். உள்ளே களங்கத்தின் ஜ்வாலை தகிக்க, மேலே வித்வத் கம்பீரம் குன்றி அசடுதட்ட நிற்கும் ஸாமிநாதனை அப்பொற் கொடியாள் கம்பீரமாகப் பார்த்துப் புன்னகை பூத்த வதனத்துடன் "வாருங்கள்! வாருங்கள்! வெகு நாட்களாக எனக்கு ஸம்ஸ்க்ரு தத்தை நன்ருகச் சொல்லிக்கொள்ள வேண்டுமென்கிற ஆசை அபாரமா

யிருந்தது. கண்டவர்களிடமும் நான் கற்றுக்கொள்ள விரும்பவில்லை. தங்களைப்பற்றிக் கேள்விப்பட்டு அழைத்துவரச் செய்தேன். இப்படி ஆசனத்தில் அமருங்கள்'' என்று கூறி அவனை நமஸ்கரித்தாள்.

சொல்கிற வார்த்தைக்கும் பதில் சொல்லத் தெரியாமல் பல்லை இளித்து அசட்டுப் பார்வை பார்த்த வாறு உட்கார்ந்தான். "ஸ்வாமி! இன்றே நாள் நன்றாகவிருப்பதால் பாடத்தையும் இப்போதே ஆரம் பித்துவிடலாம் என்று நினைக்கி றேன். சரிதானே!'' என்று குயிலோ, யாழோ என்று ஐயுறத் தக்கவிதம் கேட்டாள்.

ஸாமி:—ஆகா! சுபம் சீக்ரம்... என்றபடி நினைத்தமாத்திரத்தில் செய்து முடிப்பதுதான் நல்லது. திவ்யமாய் ஆரம்பிக்கலாம். நான் புத்தகம் ஒன்றும் கொண்டுவர வில்லையே!.

ரத்:—பரவாயில்லை. என் லைப்ரரி யில் ஏராளமான புத்தகங்கள் இருக் கின்றன — என்று கூறியவாறு அவனை புத்தகசாலைக்கு அழைத்துச் சென்றாள்,... அடாடா! புத்தகசாலை என்றால் சாமானியமாகச் சொல்லி விட முடியுமா! அவ்வறையைப் பார்க்கும்போதே ஸரஸ்வதியின் கடாக்ஷம் ஜாஜ்வல்யமாய் ப்ரகா சித்துக் காண்போர் உள்ளங்களைப் ப்ரமிக்கச் செய்யும் அற்புதத்தைக் கண்டு ஸாமிநாதன் தடைகட்டிய நாகம்போல் நின்றான்.

கண்ணாடி பீரோக்களில் வரிசை வரிசையாக புத்தகங்களை அடுக்கியி ருக்கும் அழகு ஒன்றே போதும். தமிழ், தெலுங்கு, ஸமஸ்க்ருதம், ஹிந்தி, கன்னடம், மராட்டி, மலை யாளம், ஆங்கிலம், ப்ரஞ்சு என்று அந்தந்த பீரோவின்மீது பெரியதாக எழுதியிருந்தது தவிர வேதாந்தம், புராணம், சரித்திரம், நாவல், கதை, வைத்திய சாஸ்திரம், ஜோதிஷசாஸ் திரம், சங்கீதம், பரதம் என்ற பிரிவு களை அந்தந்த பீரோவின்மீது கொட்டை கொட்டையாக எழுதியி ருப்பதையுங்கண்டு பின்னும் திகைத்தே போய்விட்டான்.

"அடாடா! இத்தனை பாஷைக ளைக் கற்றுள்ள கலாராணியா இவள்! இவளுக்கு முன்பு நான் நிற்பதற்குக்கூட யோக்யதை இல் லையே. நானா இவளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் லாயக்குள்ள வன்?...என் மனத்தின்விபரீத எண் ணத்தை நினைக்க எனக்கே வெட்க மாயிருக்கிறதே!'... என்று ஏதேதோ யோசித்தவாறு அவ்வறையை முற் றும் பார்த்தான். "கேவலம் வைதி கப் பித்தின் விளைவால் தற்சமயம் உலக பாஷையாயிருக்கும் ஆங்கி லத்தையே கற்காமல் முட்டாள் தனம் செய்துவிட்டதின் பிசகு இப் போதுதானே தெரிகிறது. கொஞ் சம் அந்த பாஷை ஞானம் இருந்தி ருந்தால் எனக்குப் பெரிய பெரிய காலேஜ்களில் வேலை கொடுப்பதாக இப்போது சொல்வதைக்கேட்க வெட்கமாயிருக்கிறதே!'' என்று ஏதேதோ எண்ணியவாறு நிற்கை யில் ரத்னப்ரபா வால்மீகிராமா யணப் புத்தகத்தை எடுத்துக் கொடுத்து "இதுதானே! போது மல்லவா?'' என்றாள்.

'ஆகா! போதும்." என்று கூறிய வாறு புத்தகத்தை வாங்கிக்கொண் டான். ரத்னப்ரபா அவன் பின்னா லேயே வேறொரு அறைக்குச் சென் றாள். குத்துவிளக்கை ஏற்றிவைத்து ஸரஸ்வதி, லக்ஷ்மி, நாராயணன் முதலிய படங்களுக்கும் ராமாயண புத்தகத்திற்கும் கற்பூராரத்திசெய்து தாம்பூலம் பழவகைகளை நிவேத் யம் செய்தபிறகு வெகு பயபக்தி



வினயத்துடன் குருவை வணங்கி ஸரஸ்வதிபீடத்தருகில் உட்கார்ந்தாள். ஸாமிநாதனும் முறையே பாடத்தை ஆரம்பித்தான்.

த்யானச்லோகம் மங்களச்லோகம் முதலியவைகளை ரத்னப்ரபா இன்னிசையுடன் பாடுவதைக் கேட்டுஇதுகாறும்சங்கீதத்தை ரஸிக்கும் சக்தியே இல்லாது மண்டுகம் போலிருந்தஸாமிநாதன் இந்தஅபூர்வ கந்தர்வ கானத்திறகொப்பான சங்கீதத்தைக்கேட்டுத் தன்னையே அறியாது லயித்திருந்தான். சங்கீதத்திற்கு இத்தனை வசிய சக்திபிருக்கிறதா! என்று நினைக்கும்போது அவனுள்ளமேவியப்புக்கடலாடியது.

அந்தகனின் காணும்ருதத்தில் அகிலா ஈடுபட்டிருப்பதன் அருமை இந்த நிமிஷம்தான் ஓரளவு தெரிந்தது. பாடம் சொல்லிக்கொடுக்கும் போது அந்த யுவதியை இமை இசைக்காமல் இவன் பார்க்கிறுனே யன்றி அவள் என்னமோபுத்தகத்திலேயே ஐக்யமாகிக்காணப்பட்டாள். ச்லோகங்களும் அர்த்தமும் சொல்லியான பிறகு அவள் மீண்டும் அவனை தரிசனம் செய்து குரு தக்ஷிணையாகப் பலவித பழவகைகளுடன் 50–ரூபாய் பணமும் ஒரு ஜதை பட்டையாக ஜரிகைக்கரை போட்ட வேஷ்டியும் வைத்துக் கொடுத்தாள்.

இவைகளைப் பார்க்கும்போதே ஸாமிநாதனுக்கு இன்னதென்று கூறத்திறமற்ற வியப்புண்டாகி...
''இதெல்லாம் எதற்குன்ன! உங்கள்

அன்பும் தயவுமிருந்தால் போதும். ஏதோ என்னிடம் கற்றுக்கொண்டு நன்ருகப் பண்டிதையாகிவிட்டால் த்ருப்தி. நேற்று நீங்கள் பாடிய ச்லோகமும் அதனழகும் உச்சரிப்பின் அத்புதமும் என்னை ப்ரமிக்கச் செய்துவிட்டன. என் ஜன்மத்தில் நான் இதுவரையில் இத்தகைய நாட்டியமும் பார்த்ததில்லை. சங்கீதமும் கேட்டதில்லை. முதல்முதல் கலாராணியும் இசைவாணியுமான உங்களது சங்கீதத்தைத்தான் கேட்டேன். மறுபடியும் எப்போது இத்தகைய விருந்து கிடைக்குமோ என்று என்னுள்ளம் ஏங்குகிறது' என்ருன்.

ரத்ன :—உம் ... இதென்ன ப்ரமாதம்! என்னிலும் சிறந்த காரிகளும் நாட்டிய அரசிகளும் ஏராளமாயிருக்கிருர்கள். ஏதோ தங்கள் அபிமானத்தினுல் என்னைப் புகழ்ந்து பேசுகிறீர்கள்... இன்று இரவுகூட பக்கத்து ஊரில் ஒரு நாட்டியக் கச்சேரியிருக்கிறது. தாங்கள் ப்ரியப்பட்டால் கூட வந்து பார்க்கலாம்; அங்கேயே சாப்பாட்டுக்கு கோயிலில் ஏற்பாடு செய்கிறேன். நாளை த்விதியாவிக்கினமின்றி பாடத்தைச் சொல்லிவிட்டுஊருக்குப் போகலாம்' என்று கூறி உள்ளே சென்ருள்.

இதற்கே காத்துக்கொண்டிருந்த சாமிநாதன் அப்படியே பூரித்துப் போய் தன் அதிர்ஷ்டந்தான் இம்மாதிரி ஒன்றன்பின் ஒன்ருகக் கை கூடுகிறது. முதலில் நாம் நமது மனத்திலிருப்பதை வெளியிடக் கூடாது. இன்றேடு இக்குடுமிக்கு ஒரு முழுக்குபோட்டு இதை எடுத்துவிட்டு நாகரிகமாய் க்ராப்பு செய்துகொண்டு நவநாகரிகமாய் உடையும் அணிய ஆரம்பிக்கவேண்டும். அதோடு, நமது மருமகப்பிள்ளையிடமே ஆங்கிலமும்கற்றுக்கொண்டு பார்வைக்குத் தடபுடலாக ஆகவேண்டும். இம்மாதிரி பஞ்சாங்க பாப்பான் வேஷத்திலிருக்கும் வரையில் அவளிடம் நமது எண்ணத்தைத்தெரிவிக்க யோக்யதையே கிடையாது. அப்படித் தெரிவித்தாலும் அவமானப்படவேண்டிதான் வரும்'' என்றெல்லாம் தனக்குள் எண்ணியபடியே தன் ஸ்வரூபத்தை அக்குள்ள கண்ணுடியில்பார்த்தான்.

அவனுடைய தோற்றம் இதுவரையில் சகஜமாகத் தோன்றிய அதே கண்களுக்கு இப்போது இக்கோலம் மிகவும் விகாரமாயும் பார்க்க வழுங்காததாயும் தோன்றியது. அதே நிமிடத்தில், தான் க்ராப்பு செய்துகொண்டு கால்சட்டை மேல்சட்டை அணிந்த பிறகு எப்படியிருப்போம் என்று மனக் கண்ணுல் ச்ருஷ்டி செய்துப்பார்த்தபோது,அவனுடைய ஆனந்தம் கரைகடந்தது. ''அடாடா! என்ன அழகு! என்ன அழகு!...... மேசிதனின் உருவையே மாற்றி அபூர்வமாகச் செய்துவிட்டதே!''... என்று அவன் மனமே பெருமிதமடைந்துக் கொந்தளித்தது-

அதே சமயம் அதே கண்ணுடியில் தெரியும் அவ்னது பழயருபம் அவனது நவீன அலங்காரத்தைக்கண்டு ''ஏ மடையா! இன்று இந்த நிமிஷம் உனக்குத் தோன்றிய விநோத உணர்ச்சியும் ஆசையும் புத்தியும் முன்பே தோன்றியிருக்குமாயின் கொலை செய்வதற்கு ஒப்பாக உன் சகோதரியின் கையை உடைத்திருக்கமாட்டாயே!...ஒருவித பாதகத்தையும், சிறு குற்றத்தையும் அறியாத மனைவியையும் பச்சிளங்குழந்தையையும் கடுஞ்சினங்கொண்டு கல்நெஞ்சத்துடன் நிராகரித்து அவர்கள் மனங்கலங்கச் செய்திருக்கமாட்டாயல்லவா? பாதகா! உன் பவிஷுக்கு ஷோக்கு வேறேயா?'' என்று சுடச்சுட ஏசிப்பேசியது.

கலைப் பொக்கிஷத்தை மிகவும் குறைந்த விலையான ரூ. 2/-க்கே கொடுப்பதைப்பற்றி பெருமை கொள்கிறோம்; பூரிப்படைகிறோம். கவர்ச்சி மிகுந்த மூவர்ணப்படம் மேலட்டையை அலங்கரிக்கின்றது. மதசம்பந்தமானதும், சமூக சம்பந்தமானதும், கலைச்சிகரமானதும், ஹாஸ்யரஸம் நிரம்பியதுமான பல விஷயங்களும் படங்களும் உல்லாஸச் சோலையின் விதவிதமான மலர்களைப்போன்று பிரகாசிக்கின்றன.

தமிழ் நாட்டின் முடிசூடா மன்னரென விளங்கும் தமிழ்த்தாயின் தவப்புதல்வர் ராஜாஜி எழுதியுள்ள விபாசம் கற்பனையிலாரம்பித்துக் கீதோபதேசத்தில் முடிவடைந்து மலரின் சிகரமென விளங்குகிறது. அதைப் படிக்கும் வாசகர்கள் நீண்ட ஆயுள் பெறுவதெப்படியென்பதையறிந்துப் பயன் பெறுவர்... திவான் பகதூர் பாஷ்யமய்யங்காரும், திவான்பகதூர் ராமஸ்வாமி சாஸ்திரியாரும் ஹிந்து தர்மத்தைக்குறித்த ஆத்மார்த்தகமான அரிய பெரிய விஷயங்களை அளித்துள்ளார்கள்... கவியோகி சுத்தானந்தர் ஒரு சமுதாய கீதத்தை முழங்குகிறார்... ஸ்ரீ வைஷ்ணவ அன்பர்களுக்கென்றே விசேஷ வியாசங்களை அருளியிருக்கின்றனர் இரண்டு ஆசார்யர்கள்... ஒரு இலக்கிய ஸேவகர் காப்பிதாஸராகவும் காணப்படுகிறார்!......நாலுகால் ஒரு வால்—பெரியாரொருவர் டயரி எழுத ஆரம்பித்துவிடுகிறார்.........பழமொழிகளை அள்ளிவீசுகிறார் இன்னொருவரின் 'பேனைப்பெரியார்......பல பல அரிய அம்சங்கள். இங்கு குறிப்பிடுவதற்கு இடமில்லை. நெறிதப்பி நடப்பவர்களுக்குச் சுடச்சுட சாட்டையடி கொடுப்பதையே பிரதிக்ஞையாகக் கொண்டுள்ள் கஸ்தூரியின் வியக்கும் வரலாற்றை 66-வது நாவலில் படித்து மகிழுங்கள். இந்த மலரில் எந்த அம்சம் சிறந்ததென்று சட்டெனக் கூறமுடியாதபடி திகைக்கவைக்கிறது ஒவ்வொரு அம்சமும். பொங்கல் பண்டிகைக்குள் இலங்கை தென்கோடியிலிருந்து ஹிமாசலம் வரை—மலரை முன்னதாகப் பதிவுசெய்துள்ள—எல்லா மோகினி அன்பர்களுக்கும் கிடைத்துவிடும். அவசரப்பட்டு அதற்குள் "இன்னும் வரவில்லையே" என்ற கடித பாணங்களைத் தொடுத்துவிடாதீர்கள்.

"பொங்கல் மலராகையால் ஜனவரி மாதம் முதலில் பணமனுப்புகிறோம்; எங்களுக்காக ரிஸர்வ் செய்துவையுங்கள்" என்று அநேகர் கடிதம் எழுதியிருப்பதால் ஏற்கெனவே பதிவாகிவிட்டப் ப்ரதிகளைத்தவிர வெகு குறைவான அளவுதான் ரிஸர்வ்செய்து வைத்திருக்கிறோம். யாருடைய ஆர்டர் முன்வருகிறதோ அவர்களுக்கு அனுப்பிவிடுவோம். பிறகு குறை கூறிப் பயனில்லை. சென்னை திருவல்லிக்கேணியிலுள்ள நமது காரியாலயத்திலும் கிடைக்கும்.

புதிதாக ஜகன்மோகினி வாங்குவோர் தொடர்ச்சியாக கதையைப் படிப்பதற்காக மலர்ந்த இதழ் முதல் பாகம் உயரிய காகிதத்தில் கலர்ப் படங்களுடன் தனிப் புத்தகமாக வெளிவந்துள்ளது. விலை ரூ. 1—4.

**உதயசூரியன் முற்றும் செலவாகிவிட்டது. 2-ம் பதிப்பு அச்சாகிறது.**

All rights of reproduction and translation of the contents of JAGANMOHINI are strictly reserved. The names and characters in all stories in this magazine are entirely imaginary and have no reference whatsoever to real persons.
JAGANMOHINI is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, Vaithamanidhi Cottage, Station Road, Singaperumalkoil
JAGANMOHINI is owned and edited by Mrs. V. M. KOTHAINAYAKI AMMAL, assisted by the Editor-in-charge: V. M. SRINIVASAN, M.A., B.L.

# முடிவின் ஆரம்பம்




இந்த பெயர்கள் ஞாபகத்தில் இருக்கின்றனவா?.......... கொஞ்ச நாட்களுக்கு முன்பு அவைகள் பத்திரிகையில் தலைப்புப் பெயர்களாய் இருந்தன. திமாப்பூருக்கு அருகாமையிலுள்ள ரயில்வே ஆபத்துக்குள்ளாக்கப்பட்டிருந்தது. கோஹிமாவிலுள்ள இந்திய சேனையை அதைவிடப் பெரியதோர் சேனை முற்றுகையிட்டது. ஜப்பானியத் துருப்புக்கள் இம்பால் சமவெளியில் நுழைந்து பிஷன்பூருக்கு வடக்கிலும், தெற்கிலும் இருந்தனர். உக்ரல் பாதுகாப்பு இல்லாமல் இருந்தது.

இப்பொழுது இவையாவும் பழங்கதையாகிவிட்டன. ஜப்பானியர்கள் தோற்கடிக்கப்பட்டு, தப்பி ஓடிக்கொண்டிருக்கின்றனர். இன்று திமாப்பூருக்கு 150 மைல் தூரத்திற்குள் ஜப்பானியர் ஒரு இடத்திலுமில்லை. நாகாக்கள் கோஹிமாவிற்குத் திரும்பி வந்துவிட்டனர். வெடிகுண்டுகளால் துளைக்கப்பட்டுப் பொசுக்கப்பட்ட மலைப்பட்டிணத்தைப் புதுப்பிக்கத் திட்டமிடப்படுகிறது. பிஷன்பூர் மலைகளின் நடுவே "தோற்கடிக்கப்படமுடியாத சேனை ." என்று தம்மைத் தாமே கூறிக்கொண்ட ஜப்பானியர்களின் எலும்புகள் குவிந்துகிடக்கின்றன. அவர்களின் முடிவுக்கு அது ஆரம்பம். நீங்கள் இதைப் படிக்கும் சமயம் .இவைகள்போன்ற வெற்றிக்குக் காரணமான தைரியமுள்ள வீரர்களைப்பற்றி நினையுங்கள்

நம்சேனைகள் 'ஜப்பானியர்கள்' அவதார புருஷர்களோ அல்லது தோற்கடிக்க முடியாத மேலானவர்களோ அல்ல என்பதை நிரூபித்துவிட்டனர்.

நம்மால் ஜப்பானியர்களைத் தோற்கடிக்க முடியும் என்பது நமக்குத் தெரியும்......

